விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 130 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 14 சனிக்கிழமை (27.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### வடக்கில் இன்று
## வெப்பம் உச்சமாகும்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இன்று வெப்பம் உச்சமான நிலையில் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் இன்று வெப்பநிலை அவதானம் செலுத்த 15

## இலங்கை - அமெரிக்க உறவு தசாப்த காலத்தைக் கொண்டது

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)

இலங்கைக்கும் - அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு கிட்டத்தட்ட தசாப்த காலத்தைக் கொண்டது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக் 15

## 3 இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

இந்திய மீனவர்கள் மூவர் யாழ். மேல் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த இரண்டாம் மாதம் 4ஆம் திகதி 04

### யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளாகியும்
# தமிழர்கள் சுதந்திரமாக வாழ முடியாதுள்ளது
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில்கூட தமிழர்கள் சுதந்திரமாக வாழ முடியாதுள்ளது என சுட்டிக்காட்டிய சிறீதரன் எம்.பி இந்நாட்டில் தமிழர்கள் இருக்கக்கூடாது அல்லது வாழக் கூடாது என அரசு நினைக்கின்றதா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### முறிகண்டியில் விபத்து
## இராணுவச் சிப்பாய் ஸ்தலத்தில் மரணம்

(முல்லைத்தீவு)

ஏ9 வீதி, முறிகண்டி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவ வீரரொருவர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பார ஊர்தியை, அதே திசையில் 04

### எரிபொருள் விநியோகம்
## புதிய நடைமுறைக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

எரிசக்தி துறைக்கான புதிய ஒழுங்குமுறை ஆணையத்தை அறிமுகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. 15

## முகமாலைப் பகுதியில் மனித எச்சங்கள் மீட்பு



15

## நாட்டின் அரசியல் விடயங்களில் மதத் தலைவர்கள் தலையிடக்கூடாது
### மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி



(கொழும்பு)

“மதத் தலைவர்கள் அரசியல் விடயங்களில் தலையிடக்கூடாது” என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற் 15

### பருத்தித்துறையில்
## விபரீத முடிவெடுத்த பெண் மரணம்

(கரணவாய்)

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக விபரீத முடிவெடுத்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## வவுனியாவில் பெண்ணை மிரட்டி நகை, மோ.சைக்கிள் அபகரிப்பு
### மூவர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்திற்குச் சென்ற பெண்ணிடம் கைவரிசை காட்டிய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயவீதி ஊடாக கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு கடந்த 17ஆம் திகதி அதிகாலை பெண் ஒருவர் தனது குழந் 04

### SLEAS சேவை மூப்பு நியமனம்
## நாடு முழுவதும் 62 பேர் தெரிவு 23 தமிழர்கள் உள்ளடக்கம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை III திறமை சேவை மூப்பு அடிப்படையில் நாடு முழுவதும் 62 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதில் தமிழ் பேசுவோர் 23 பேரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கிழக்கிலிருந்தும் 3 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிவிட்டது

யாழ்.போதனா வைத்தியசாலையை அண்மித்த வீதியில் எனது ஆட்டோ பதிவுப் புத்தகம்(ABT-4539)தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (574)

**077 438 2675**

# பண்ணை வேலைக்கு ஆள் தேவை

சம்பளம் சுமார் 55,000/- வீடு கொண்டு செல்லக் கூடியதாகவும்
EPF & ETF முழுவதுமாக எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும்
தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம் (577)

**077 127 8122**

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா)**

திதி: சங்ஹடகர சதுர்த்தி

தோற்றம்:-13.10.1924
மறைவு:- 19.04.2014

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்,
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து
நீங்கள் விண்ணோக்கிச் சென்று
பத்தாண்டு சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

இல.140, பரமேஸ்வரா சந்தி.
திருநெல்வேலி. (0030)

பிரிவால் துயருறும்
ம.இராஜநாயகம் குடும்பத்தினர்

## தமிழர்கள்...

பாராளுமன்றத்தில் இடம்பற்ற 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,வவுனியா தோணிக்கல்லை சேர்ந்த முன்னாள் போராளியும் சமூக செயற்பாட்டாளருமான செல்வநாயகம் ஆனந்தவர்மன் என்கின்ற அரவிந்தன் கடந்த 2024 -03-26 ஆம் திகதியன்று பயங்கரவாத் குற்றத்தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டு தற்போது வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான எட்டரை ஆண்டுகள் தமிழ் அரசியல் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் முன்னாள் போராளிகளினதும் அவர்களின் குடும்பங்களினதும் கல்வி, பொருளாதார நெருக்கீடுகளை தீர்க்கும் மனிதாபிமான செயற்பாடுகளை புலம்பெயர் நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்போடு முன்னெடுத்தும் போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவராக இருந்து பலதரப்பட்ட சமூகப்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

ஆனால் இவர் மீது ரி.ஐ.டி. யினர் சுமத்தியுள்ள பொய் குற்றச்சாட்டுக்களான பயங்கரவாத்திற்கு உதவியளித்தல், விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்தல் போன்ற எந்த செயற்பாடுகளிலும் இவர் ஈடுபட்டிருக்கவில்லை. மனிதாபிமான பணிகளில் ஈடுபட்ட ஒருவரை வாக்குமூலம் பெறுவதென்ற போர்வையில் கொழும்பிலுள்ள ரி.ஐ.டி. அலுவலகத்திற்கு அழைத்து அங்கு வைத்து கைது செய்து சிறையில் அடைப்பதென்பது இந்த நாட்டின் அதி உச்ச எதேச்சதிகாரத்தையே மீண்டும் காட்டியுள்ளது.

முன்னாள் போராளிகளை அச்சுறுத்தும் வகையிலும் அவர்களது இயங்கு நிலையை முடக்கும் வகையிலும் திட்டமிட்ட வகையில் கைது செய்யப்பட்டுள்ள அரவிந்தனை உடனடியாக விடுதலை செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நாட்டில் முன்னாள் போராளிகளினதும் சமூக செயற்பாட்டாளர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

(ம-7,10)

# வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் அமைந்துள்ள ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் ( Hardware) ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு.
**ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்** (578)

**077 494 9683**
**077 077 6469**

# பெயர் மாற்ற அறிவித்தல்

கேசரி றோட் தையிட்டியில் வதியும் திருமால் சந்திரகாந்தமலர் ஆகிய நான் 26/04/2024 முதல் சந்திரகாந்தி என்கின்ற எனது முதற்பெயரை சந்திரகாந்தமலர் என மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே நான் பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
திருமதி. திருமால் சந்திரகாந்தமலர்
தி.சந்திரகாந்தமலர்

(571)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலோலி கிழக்கு புலோலி

**பகிரங்க ஏல விற்பனை**
சங்கத்தின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள்
பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட உள்ளன
காலம் - 05.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - முற்பகல் 10.00 மணி
இடம் - சங்கத் தலைமை அலுவலகம்

**நிபந்தனைகள்**
1.விற்பனை செய்யவுள்ள பொருட்களை 03.05.2024வெள்ளிக் கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நேரில் வந்து பார்வையிட முடியும்.
2.தெரிவு செய்யப்பட்ட ஏலதாரர்கள் அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையினை முழுமையாக செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்ற வேண்டும்.
3.மேலதிக விபரங்களை சங்கப் பொது முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்

(C-0214)

தொடர்புகளுக்கு **077 136 2477**

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நாகம்மா



மலர்வு 13.08.1939
உதிர்வு 24.04.2024

யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் விநாயகபுரம் துணுக்காயை வசிப்பிடமாகவும் அணிஞ்சியன்குளம் மல்லாவியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகம்மா அவர்கள் 24/04/2024 அன்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதர்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் தனுஸ்கோடி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தனுஸ்கோடி சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான கதிராசிப்பிள்ளை, அரியபுத்திரன், சேதுப்பிள்ளை, நாகலிங்கம், தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லம்மா, நாகேந்திரன், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சத்தியசீலன் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்), ஞானசீலன் (சுவிஸ்), அன்பரசி (விநாயகபுரம்),மங்கையற்கரசி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (ஸ்கந்தபுரம்), வைத்தீஸ்வரன் (அமரர்), புவிநாயகன் (அதிபர் மு/சிறாட்டிகுளம் அ.த.க.பா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைச்செல்வி (ஆசியர்-துணுக்காய் அ.த.க பா),உமையரகுமாரி (சுவிஸ்), புண்ணியமூர்த்தி (விநாயகபுரம்), உதயகுமார் (பிரான்ஸ்), திருமலர் (ஸ்கந்தபுரம்), தமிழ்ச்செல்வி (ஆசிரியர் - மு/தேறாங்கண்டல் அ.த.க.பா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன், யோஜிதா (ஆசிரியர்-புனித தெரேசா பெண்கள் கல்லூரி), ஆரூரன் (அமரர்), ஆரண்யன், செந்துஷா, டசிந்தன், தயாநந்தன் (அமரர்), கஜந்தன் (அதிபர் - மு/மூன்றுமுறிப்பு அ.த.க.பா), சகிதா ( ஆசிரியர் - மு/பாண்டியன்குளம் ம.வி),கோகுலன் (அமரர்), சோபிகா, ஜனனி, பிரியந், பிரதீஸ், யதுஷா, கிருஷா, ஜெனுஷா, கோபிசன், லோஜினா, கனிவிழி, பிரணவி, சுபாஜினி, குயின்சிகா ( ஆசிரியர்-மு/விநாயகபுரம் அ.த.க.பா), டிசந்தன், டொறியன், விஜே ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரபி, அஸ்விகன், அக்சிகா, அக்ஷரா, அஸ்மிதா, கிஷானிகா, ருக்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28/04/2024 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் சந்தை விதி அணிஞ்சியன்குளத்திலுள்ள அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று முற்பகல் 9 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் அணிஞ்சியன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தை வீதி,
அணிஞ்சியன்குளம்,
யோகபுரம்,மல்லாவி

தகவல்:
குடும்பத்தினர்

(c-0216)

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின்
117வது குருபூசைத்தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

# திறந்த கட்டுரைப் போட்டி- 2024

## கட்டுரைப்போட்டிக்கான அறிவுறுத்தல்கள்

- 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்குபற்ற முடியும்.
- கட்டுரைப் போட்டியானது 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.
- போட்டியன்று தரப்படும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவு செய்து 800-1000 சொற்களுக்கு உட்பட்டதாக எழுதுவதுடன் தெளிவான கையெழுத்தாக இருத்தல் வேண்டும். (நேரம் 2 மணித்தியாலங்கள்)
- கட்டுரைப்போட்டியின் தலைப்பானது சதாவதானியின் வரலாறு, சமயம், இலக்கியம், விஞ்ஞானம், கலை பண்பாடு, சமகால பொருளாதார அரசியல் சமூக பிரச்சினைகள் போன்ற விடயப்பரப்புக்களுள் உள்ளடங்கியதாக இருக்கும்.
- வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு சதாவதானியின் 117வது ஆண்டு விழாவில் (08.06.2024) வைத்து சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.
- போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 10.05.2024 ஆம் திகதிக்கு முன்னர் போட்டியாளர் பெயர், முகவரி, தொ.பே.இலக்கம், தே.அ.அ.இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை. எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**கட்டுரைப்போட்டிக்கான பரிசு விபரம்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | : ரூபாய் 20,000.00 |
| இரண்டாம் பரிசு | : ரூபாய் 15,000.00 |
| மூன்றாம் பரிசு | : ரூபாய் 10,000.00 |
| ஆறுதல் பரிசு | : ரூபாய் 5,000.00 |

(C-0215)

மேலதிக தொடர்புகளுக்கு : 077 723 8594 , 077 083 1166

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்

## புள்ளி விபரங்கள் தகவல்

(கொழும்பு)

முப்பதாண்டுகாலப் போரின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட தற்போது வீதி விபத்துகளினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அண்மைய புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அண்மைக் காலமாக வீதி விபத்துகளினால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதிகரித்த வாகனங்களின் பயன்பாடு மற்றும் சாரதிகளின் கவனக்குறைவினாலேயே அதிகமான வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக போக்குவரத்து மற்றும் வீதிப்பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார். (நி-6)

# கடற்றொழிலை வலுப்படுத்த ஜப்பான் 3 மில்.டொலர் நிதியுதவி

(கொழும்பு)

**இலங்கையின் கடற்றொழிலை வலுப்படுத்தவும் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உணவு மற்றும் விவசாய அமைப்பு மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஜப்பான் வழங்கியுள்ளது.**

கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து உள்நாட்டு கடற்றொழில் துறையை வலுப்படுத்தவும் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஜப்பான் அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை வழங்கியுள்ளது.

இந்த 3 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன்.முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அனுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மீன் இனப்பெருக்க நிலையங்களை ஸ்தாபித்து, மீன் வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்தி இனவிருத்தி மற்றும் வளர்ப்புத் திறனை அதிகரிக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட, நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பை அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தீவு நாடுகளான ஜப்பானும் இலங்கையும் தமது பொருளாதாரங்கள் மற்றும் கலாசாரங்களில் மீன் வளத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# உள்ளூராட்சி நிறுவனங்களில் 8400 பேருக்கு நிரந்தர நியமனம்

## இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர



(கொழும்பு)

உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர் பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி, உள்ளூராட்சி நிறு வனங்களில் உள்ள 8,400 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(நி-6)

# மத்தல விமான நிலைய நிர்வாகம் இந்திய, ரஷ்ய நிறுவனங்களிடம்

(கொழும்பு)

மத்தல விமான நிலையத்தின் நிர்வாகத்தை இந்திய ரஷ்ய நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.30வருட காலத்திற்கு ரஷ்யா இந்தியா கூட்டு முயற்சிக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் செளர்யா ஏரோநாட்டிக்ஸ் ரஷ்யாவின் எயர்போர்ட் ரீஜன்ஸ் முகாமைத்துவ நிறுவனத்திடமும் மத்தல விமானநிலையத்தின் நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது. (நி-6)


**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சமையல் உதவியாளர்(ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர்(ஆண்/ பெண்)
- சிற்றுண்டி தயாரிப்பாளர்(ஆண்/ பெண்)
- சுத்திகரிப்பாளர் (ஆண்/ பெண்)
- மேற்பார்வையாளர்(ஆண்)

தொடர்புகளுக்கு- (563)

077 469 6695, 070 664 7466

**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

MoneyGram Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974 (549)


# ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை முன்னிலையில்

(கொழும்பு)

ஆஸ்துமா நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட உலக நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளதாக இலங்கை சுவாசநோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் மொத்த சனத்தொகையில் 10 முதல் 15 சதவீதமானவர்கள் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோய் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களின் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)


**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்**



கடந்த 29.03.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்.

**நாகமுத்து பாலபரமேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.04.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பற்பை, இரும்பு மதவடி, வதிரி,கரவெட்டி.

தகவல்- குடும்பத்தினர்



**பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே,11,12.2024.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

தையுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற போது, குறித்த வீதியில் முகத்தை மூடி துணிகளால் கட்டியபடி நின்ற மூன்று இளைஞர்கள் குறித்த பெண்ணை வழிமறித்து அவருடைய குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்ததுடன், குறித்த பெண்ணின் மோட்டார் சைக்கிளையும் பறித்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அபகரிக்கப்பட்ட மூன்று அரைப் பவுண் நகைகள் உருக்கப்பட்ட நிலையில் யாழில் உள்ள நகைக்கடை ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. பறித்து செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் கனகராயன் குளம் பகுதியில் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதைவிட இரண்டு பென்ரன் மற்றும் லப்டொப் என்பனவும் குறித்த மூவரிடம் இருந்து மேலதிகமாக மீட்கப்பட்டுள்ளது. இவை கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து திருடப்பட்டவை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த மூவரையும், சான்றுப் பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10,250

## இராணுவ...

பயணித்த இராணுவ கப் ரக வாகனமொன்று முந்திச் செல்ல முற்பட்ட போது, கப் ரக வாகனத்தில் பயணித்த இராணுவ வீரர் தவறி விழுந்த நிலையில் பார ஊர்தியின் சில்லுக்குள் அகப்பட்டார். அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம்விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 07 பேரும் காயங்களுக்கு உள்ளாகியுள்ள னர்.

சம்பவத்தில் காயமடைந்த 7 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,10,100,316)

## 3 இந்திய...

இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இரண்டு படகோட்டிகளுக்கு தல ஆறு மாத கால சிறைத் தண்டனை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்தது.

மேலும் இரண்டாம் மாதம் எட்டாம் திகதி அதே கடற்பரப்பில் வைத்து ஒரு படகுடன் கைது செய்யப்பட்டிருந்தவர்களுக்குமான வழக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இடம்பெற்று இருந்த நிலையில் அப்படகோட்டிக்கும் ஆறு மாத கால சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்து.

இவ் வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்டு நேற்று வெள்ளிக் கிழமை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டி. எஸ். சூசைதாசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது இந்திய மீனவர்கள் சார்பில் இந்திய துணைத் தூதரகம் நியமித்த சட்டத்தரணி அருள் பிரகாசம் நிரோஜன் ஆஜராகி இருந்தார்.

நீரியல் வளத்திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணி ஆஜராகி இருந்தார். வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி நல்லிணக்க அடிப்படையில் மூன்று மீனவர்களையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். (ம-7,10,60)






# முதலையிடம் தப்பினார்... சிறுத்தையிடம் சிக்கினார்

## கிரிக்கெட் வீரருக்கு நேர்ந்த துயரம்

முதலையிடம் இருந்து தப்பிய கய் விட்டல், சிறுத்தை தாக்கியதில் படுகாயமடைந்தார்.

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் "சகலதுறை வீரர்" கய் விட்டல், (வயது-51). மொத்தம் 46 டெஸ்ட் ( 2207 ஓட்., 51 விக்.,) 147 ஒருநாள் போட்டிகளில் (2705 ஓட்., 88 விக்.,) பங்கேற்றுள்ளார்.





இவர், ஹூமானி காட்டு பகுதியில் தனது செல்ல நாய் சிக்காராவுடன் "டிரக்கிங்" சென்றுள்ளார். அப்போது திடீரென பாய்ந்த சிறுத்தை தாக்கியுள்ளது.

உடனே சுதாகரித்த நாய் சிக்காரா உதவிக்கு வந்துள்ளது. குரைத்துக் கொண்டே சிறுத்தையுடன் சண்டையிட்டுள்ளது. வளர்ப்பு நாய் தயவில் உயிர் தப்பிய விட்டலுக்கு தலை, கை, கால் பகுதியில் படுகாயம் ஏற்பட்டது. தலையில் இருந்து ரத்தம் அதிகளவில் வழிந்துள்ளது. முதலுதவி சிகிச்சைக்கு பின், சிறப்பு விமானம் மூலம் சிம்பாப்வே தலைநகர் ஹராரே சென்ற இவருக்கு, மில்டன் பார்க் மருத்துவ மனையில் "சத்திரசிகிச்சை" செய்யப்பட்டது. தலையில் "பேண்டேஜ்" உடன் இருக்கும் விட்டலின் "போட்டோ"வை அவரது மனைவி ஹானா ஸ்டூக்ஸ் வெளியிட்டுள்ளார்.

### முதலை அனுபவம்

ஏற்கெனவே 2013ல் விட்டலின் கட்டிலுக்கு கீழ், 8 அடி நீளம், 150 கிலோ எடை கொண்ட ராட்சத முதலை ஒன்று தஞ்சம் புகுந்தது. இரவு முழுவதும் அசரா மல் தூங்கிய இவர், காலையில் எழுந்ததும் தனது காலை முதலைக்கு மிக அருகே வைத்துள்ளார். பின் சமையலறைக்கு சென்றபோது, அங்கிருந்த பணிப் பெண் தான் முதலை... முதலை என அலறியுள் ளார். ஒரு வழியாக முதலையை அப்புறப் படுத்தினர். தற்போது சிறுத்தையிடம் சிக்கி, மீண்டு வருகிறார்.

### உயிரை காத்த நாய்க்கு நன்றி

விட்டலின் மனைவி ஹானா ஸ்டூக்ஸ் கூறுகையில்,

"முதலை, சிறுத்தையிடம் இருந்து உயிர் தப்பிய விட்டல் உண்மையில் அதிர்ஷ்டக் காரர் தான். இம்முறை நாய் சிக்காரா வின் உதவியுடன் உயிர் பிழைத் துள்ளார். எங்களது நாய்க்கு முதலில் நன்றி சொல்ல வேண் டும். சிக்காரா வுக்கும் சில இடங் களில் காயம் ஏற்பட்டுள்ளது. உடல்நிலை தேறி வரும் விட்டல், சிறுத்தையுடன் சண்டையிட்ட "திகில்" அனுபவத்தை பகிர்ந்து வருகிறார், என்றார்.

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிஐயா தங்கரத்தினம் (ரதி)



தோற்றம் : 10.10.1947 | மறைவு : 26.04.2024

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா தங்கரத்தினம் (ரதி) அவர்கள் நேற்று (26.04.2024) வெள்ளிக் கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா தம்பிஐயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (சிங்கர்) - பூமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசா - பாலமணி தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் சந்தனலிங்கம், மகாலிங்கம் (சுவிஸ்), அமரர் குணரத்தினம் (சின்னமணி - ஏழாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உ.கோசலாதேவி (சுவிஸ்), த.வாமதேவன் (அதிபர் - தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி, தெல்லிப்பழை), ஸ்ரீ.கௌசல்யாதேவி, ப.மீராதேவி (நெதர்லாந்து), சு.கௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் உமாகாந்தன் (சுவிஸ்), வா.தேன்மொழி (ஆசிரியை - ஸ்கந்தவரோதய கல்லூரி), ஸ்ரீகுலராஜா (பேபி), பரமலிங்கம் (நெதர்லாந்து), சுதன் (ஐயனார் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஐங்கரன் - ரமீலா (சுவிஸ்), தனுசன் - லாவன்ஜா (சுவிஸ்), காருண்ஜா (சுவிஸ்), ரங்கேஸ்வரன் - சனுசா (பிரான்ஸ்), நிஷனன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம்-B.Sc), பதூஷனன் (யாழ்.பல்கலைக்கழகம்), வா.தசாரகன் (யாழ்.இந்துக் கல்லூரி-2025 A/L), வா.ரிஷபன் (யாழ்.இந்துக் கல்லூரி-2024 O/L), வா.யாழவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.நிருஷன் (நெதர்லாந்து), ப.அஸ்வினி (நெதர்லாந்து), ப.சுபர்ணன் (நெதர்லாந்து), சு.பிருந்தாவனா (உடுவில் மகளிர் கல்லூரி-2024 O/L), சு.மிதுர்ஷிகா (உடுவில் மகளிர் கல்லூரி), சு.அட்சயன் (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் த.அமிர்தாவின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ரதிகோட்டம்
முதலியார் வளவு,
சுன்னாகம்.

தகவல் : த.வாமதேவன்
அதிபர் - யா/தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி
தெல்லிப்பழை.
தொ.பே: 077 618 4772

(579)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவரங்கு

(யாழ்ப்பாணம்)

அரங்க, சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் கிராமிய உழைப்பாளர் சங்க நிறுவுனர்களில் ஒருவரான சரவணை பாலசிங்கத்தின் 2 ஆம் ஆண்டு நினைவு கூறல் நிகழ்வானது இன்று மாலை 4 மணிக்கு பலாலி வீதியில் அமைந்துள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரி அரங்கில் சமூக செயற்பாட்டாளர் சா.தங்கராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் "தேவை" என்ற குறுநாடகமும், சுதேசிய கலாமன்றத்தின் "சத்திரிய தர்மம் என்ற நாடக ஆற்றுகைகளும் நடைபெறவுள்ளது. (நி-6)

## பெண் ஒருவரின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவருடைய ஒன்றரைப் பவுண் எடை கொண்ட சங்கிலி இனந் தெரியாத நபர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற நபர்கள் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-60)

## சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காத வர்த்தகர்

### ரூ.40 ஆயிரம் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த புதன்கிழமை சுழிபுரம் பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது திகதி காலாவதியான உணவுப் பொருட்கள், பழுதடைந்த உணவு பொருட்கள், உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத பலசரக்கு விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராக சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகரினால் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிமன்றம் பலசரக்கு கடை உரிமையாளருக்கு ரூபா 40,000 தண்டம் விதித்தது டன் எச்சரிக்கையும் விடுத்தது.

அத்துடன் கைப்பற்றப்பட்ட பொருட்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டன. (நி-6-33)

## குஞ்சர் கடை சந்திப்பகுதியில் மோ.சைக்கிள்கள் விபத்து

### இருவர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி குஞ்சர்கடை சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி இடம் பெற்ற விபத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இவ் விபத்தில் கொற்றாவத்தையைச் சேர்ந்த சஞ்சீவன் பவித்ரா (வயது- 31) மற்றும் கரணவாய் மத்தி கரவெட்டியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் அனுஷன் (வயது- 22) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(நி-6-60)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கம் நடத்தும் "சமகால சமூக, அரசியல், பொருளாதார சூழலை விளங்கிக் கொள்ளுதல்" எனும் கலந்துரையாடல் (தொடர்-1) நிகழ்வானது இன்று காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை தந்தை செல்வா கலையரங்கில் இடம் பெறவுள்ளது. (நி-6)



தந்தை செல்வாவின் 47 ஆவது நினைவு தினம் நேற்று யாழில் உள்ள செல்வா சதுக்கத்தில் இடம் பெற்றது. இதன்போது தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன் நினைவு பேருரையும் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படம் : சிவசாந்தன்)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின் முதலாவது நூல் வெளியீடாக பண்டை நகர் நாயகன் ஏ.ஈ.பீரிஸ் எழுதிய "இரகசியங்கள்" என்ற சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழாவானது இன்று மாலை 3 மணிக்கு பண்டத்தரிப்பில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி.சுபாஜினி மதியழகன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

(யாழ்ப்பாணம்)

யாழ்.பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் எம்.வைத்திலிங்கம் எழுதிய "சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்வு" என்ற நூல் வெளியீட்டு விழாவானது நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அறங்காவலர் கலாநிதி ஆறுதிருமுருகன், சிறப்பு விருந்தினராக இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

## முத்துக்குமார சுவாமிக்குருக்கள் அவர்களுக்கு செம்பொற்சோதி சிவன் அக்கினியில் அருள் செய்வான் ஓம் நமசிவாய 28.04.2024 10வது நாள் பிரார்த்தனை



ஓமத்துள் அங்கியின் உள உள்ள எம் இறை
ஈமத்துள் அங்கி இரதம்கொள் வான் உளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே.

(திருமந்திரம்- 222)

வேள்வியில், வேள்வித் தீ வளர்க்கும் ஓம் நெருப்பின் உள் மறைந்து இருப்பான். இறுதி நாளில் சுடுகாட்டில் எரியும் நெருப்பிலும் அவன் விரும்பி இருப்பான். ஆன்மாவுக்கு வலிமை சேர்ப்பதும், "ஆன்மாக்கள் சிவப்பெரும் பதியில் தங்கி இளைப்பாறச் செய்பவரும் சிவனே" எனவும், 223 ஆவது திருமந்திரம் வேள்வியால் பயன் இதுவேயாகும்.

உலகில் சிவபூமியில் எந்தவொரு சக்தி வடிவத்தின் அதி உயர்ந்த அன்னை நயினாதீவு நாகபூசணி அம்பாள் மகோற்சவ ஆதீன பிரதம குருமணி, சாகித்திய சிரோண்மணி சிவஸ்ரீ.வை.மு.ப.முத்துக்குமார சுவாமிக்குருக்கள் வேள்வியால் வேத விதிப்படி நிகழ்தலில் காலந்தோறும் சைவ மக்களின் உயர் வாழ்வுக்கு யாதும் இடையூறும் இன்றி அம்பாளிடம் அன்பு செய்வதே உண்மை என்பதை தனது அருள் திறனை நிகழ்த்தியவர்.

**"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்"** என்று பாடியதன் கருத்து சிவ வேள்விகளை வேத விதிப்படி நிகழ்த்தலால், காலம் தவறாமலும் உயிர் வாழ்வதற்கு இடையூறு இல்லாமலும் உலக நன்மைகளை பெற்று மகிழ்ச்சியாக வாழும் முறைகளையும் நிலையான முக்தியின்பத்தை அடைய வழி காட்டுவது **சைவசமயம்** என்பதையும் அறநெறியில் வாழ்ந்த சிவாச்சாரியர் யாழ்ப்பாணம் மேற்கு பக்கத்தில் சப்தத் தீவுகளிலும் மற்றும் பாடல் பெற்ற ஆலயங்களிலும். நல்லூர் சிவன் கோவிலும் இன்னும் பல ஆலயங்களிலும் கும்பாபிஷேகங்களைச் சிறப்பித்த பெருமையானவர்.

அத்துடன் பல ஆலய மகோற்சவங்களிலும் சிறப்பித்தார்.

காரைநகர் ஈழத்து சிதம்பரம் 1970 ஆம் அண்டு தொடக்கம், காலம் காலமாக 2003 ஆம் ஆண்டு வரையும் மகாகும்பாபிஷேகம் பிரதம கும்பங்களில் தனது வேள்வியை செய்தவர்.

- சிவனடியே சித்திக்கும் திருப்பெருகு சிவஞானம்.
- வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
- பூநாளும் தலை சுமப்ப புகழ் நாம் செவி கேட்ப

வேள்வி புரிதலால் துன்பம் நீங்குவதை "கற்றாங்கு எரியோம்பி கலியை வாராமே" எனும் சம்பந்தர் திருமுறையில் முற்பிறவியில் வேள்வியில் புரிந்து தேவர் உலக வாழ்வைப் பெற்றவர்கள், மீண்டும் பூமியில் வந்து அந்தணர்களோடு சேர்ந்து வேள்வி புரிதல் முத்திப்பேற்றினை அடைவதாகும்.

28.04.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை ஐயா அவர்களது பத்தாம் நாள் சூரிய பகவானையும் ஈழத்துச் சிதம்பரத்தானையும் நாகபூசணி அம்பாளையும் திருவாசகத்தேனை ஓதியும் அபிராமி 84 ஆவது அந்தாதியில் கருத்தை உணர்ந்து தியானம் செய்வோம்.

(ஓம் நமசிவாய)

ஈழத்துச்சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்
க.கு.க சிவபாலன்
முன்னாள் பொருளாளர், போசகர், செயலாளர்

ஈழத்துச் சிதம்பரத்தான் கும்பாபிஷேகம் காண்போம் பிரார்த்திப்போம்.
ஓம் நமசிவாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

### ஜாதகர்

மீன ராசியின் அதிபதி குரு. இந்த வருடம் இந்த குரு உச்சத்தன்மையுடன் விளங்குகிறார். சாதாரணமாகவே இந்த ராசி ஜாதகர்கள் கம்பீரமாகவும், மரியாதைக்கு உரியவர்களாகவும் இருப்பர். இந்த வருட கிரக சேர் க்கை மேலும் கம்பீரத்தை அதிகரிக்கும். மேலும் இவர்களது மீன ராசியில் ஒரு கிரகம் உச்சம் ஒரு கிரகம் நீசபங்கம், உடன் ராகு என்று அமைப்புள் ளது. இவ்வமைப்பு ஜாதகர்களை மிக வித்தியாசமான கோணத்தில் இட்டுச் செல்லும் இவர்கள் செய்யும் சில தவறுகள் கூட, அட இப்படிக்கூட செய்யலாமா என சிந்திக்கச் செய்யும்.

### தனம்

இந்த வருடம் அரசு வேலை கிடைப்பதால், நல்ல தொடர்ச்சியான-உறுதியான வருமான வழி கிடைக்கும். வேலை கிடைப்பதற்காக நிறைய வேண்டுதல் பிரார்த்தனைகளை நிறைவேற் றுவதற்காக பணச் செலவும் அதிகமிருக்கும். வேலை மட்டுமல்லாது தொழில் செய்வோருக்கும் ஆர்டர் நிறைய கிடைத்து அதன் மூலமும் பணச் செழிப்பு பெறுவீர்கள்.

### நோய்

உங்கள் 6 ஆம் அதிபதி சூரியன் இந்த வருடம் உச்சத்தில் உள்ளார். எனவே நோய் சீற்றம் அதிகமாக இருக்கும். அதிக நோயின் தாக்கத்தால் பேச்சு குளறுபடியா கும்.

உங்களில் சிலர் தொழில் நிமித்தம் கடன் வாங்கியிருந்தால் அவை பெருகி விடும். வரும் வரு மானம் அதை அடைப்ப தற்கே சரியாக இருக்கும்.

**எதிரிகள்:** உங்கள் எதிரிகளும், நீங்களும் சம பலத்தோடு இருப்பீர்கள். இதில் இந்த வருட விநோ




தம் என்ன வெனில் இரண்டு பேரும் சேர்ந்து ஒரே இடத்தில் இருக்க நேரிடும். சமாளிக்க வேண்டியது தான் வேறு வழி.

**வேலை:** கண்டிப்பாக அரசு பணி கிடைக்கும். அல்லது அரசியல் வாதிகளிடம் பணிபுரிய வாய்ப் புண்டு. சம்பளம் கேரண்டி.

### எதிர்பாராத இடையூறு

உங்களின் இந்த வருட துன்பங்கள் மிக உச்சத் தன்மையுடன் காணப்படுகிறது. நட்டம், நோய் போன்றவையும் உங்களை பாடாய்ப்படுத்தும். எனவே இந்த வருடம் நோய்க்குரிய சிகிச்சை முறையாக எடுத்துக் கொள்வதும், தெரியாத பெண்களிடம் நட்பு பாராட்டுவதைத் தவிர்ப்பதும் மிக பாதுகாப்பு தரும். உங்களின் அலட்சியமே உங்கள் கண்ணீருக்கு காரணமாகி விடும். கவனம் தேவை.

### அதிஷ்டம்

உங்கள் அதிஷ்ட அதிபதி செலவு ஸ்தானத்தில் உள்ளார். அதற்காக இந்த வருடம் யோகம் இல்லவே இல்லை என்று சொல்ல முடியாது. அதிஷ்டம் வரும் தான். வந்த வேக த்தில் சென்றுவிடும். ஒரு கதவை திறந்து வரும் யோகம் உங்களுக்கு ஒரு ஹலோ சொல்லிவிட்டு மறு கதவு வழியாக போயே போய் விடும்.

### தொழில்

நீங்கள் ஏற்கெனவே செய்து கொண்டிருந்த வேலையை அடிப்படையாகக் கொண்டு, புது தொழில் ஆரம்பித்து விடு



வீர்கள். அதற்கு அரசுக் கடனும் கிடைக்கும். சிலர் தங்கள் வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து தொழில் தொடங்குவர். ஏற்கெனவே தொழில் நடத்திக்கொண்டிருந்தவர்கள் வேலை அதிகமாக ஆர்டர் வருவதால், நிறைய தொழிலாளர்களை வேலைக்கு சேர்க்க வேண்டிவரும்.

### லாபம்

உங்கள் லாபாதிபதி விரயத்தில் உள்ளார். அங்கு அவர் ஆட்சியாக இருப்பதால் லாபம் வரத் தான் செய்யும். வந்த வேகத்தில் கரைந்து விடும். நீங்களும் நல்ல லாபம் தான் வருகிறதே என்று தண்டச் செலவுகளை அதிகமாக செய்து விடுவீர்கள். எனவே உங்கள் லாபம் சட்டியில் இருந்து அகப்பைக்கு வருவதற்குள் காலியாகிவிடும். நீங்கள் எண்ணிய எண்ணம் நன்கு நிறைவேறும் ஆனால் அதன் பயனும் பலனும் உங்களை வந்து சேராமல், காணாமல் போய் விடும்

### விரயம்

இந்த வருடம் உங்கள் செலவு, பயணம், விரயம், தூக்கம் இவை அனைத்துக்கும் உரிய அதிபதி ஆட்சியாகி விரயத்தில் அமர்ந்துள்ளார். எனவே நிறைய செலவு பயணம் இவை தவிர்க்க முடியாதது. இதனால் இந்த வருடம் உங்கள் விரயம் மனையில் முதலீடாக மாறட்டும். இந்தச் செலவு என்பது ஆதாயச் செலவாகிவிடும் அல்லவா. சூதானமாக இருக்கணும்.

இந்த வருடம் மீன ராசியாருக்கு நிறைய நன்மைகளும், ஒரேயொரு பலத்த அடியும் கிடைக்கும். உங்களுக்கு 70 வீதம் மதிப் பெண் கொடுக்கலாம்.

### பரிகாரம்

சனி + செவ்வாய் சேர்க்கைக்கு ஞாயிற்றுக் கிழமை தங்கரளி பூமாலை, ஒரேஞ்சு பழம் இவற்றோடு அகல் விளக்கில் மஞ்சள் துணியில் 21 மிளகை மூட்டை கட்டி நெய் ஊற்றி மஞ்சள் திரி போட்டு பைரவருக்கு தீபம் ஏற்றவும். (முற்றும்)

# இராசிபலன்

27.04.2024
சித்திரை 14, சனிக்கிழமை
திருதியை முற்பகல் 7.29 மணிவரை
கேட்டை பின்னிரவு 3.17 மணிவரை

சுபநேரம் 2.59-4.29 மணிவரை
இராகுகாலம்-8.59-10.29 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்,

சந்திராஷ்டமம்
அச்சுவினி.

வளவன்




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்,நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




பொது வாழ்வில் சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.




குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.




பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் நன்மையுண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்,எதிர்பாராத தனவரவுகள் வந்த சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.




வழிபாடு குதூகலம் தரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு.





தொழில் ரீதியான அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், மனக் குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம்.




மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் பெருக வழியமைப்பீர்கள், முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்புண்டு.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொழில் நலன்கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், எதிர்கால நலன் கருதி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுப்பீர்கள்.




உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

அதிகாலை எ[illegible] நெடுந்தூரம் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இப் பீடத்திற்கு வருடாந்தம் 350 மாணவர்களுக்குமேல் அனுமதிக் கப்படுகின்றனர்.

**இந்துக் கற்கைகள் பீடம்:**

யாழ்ப்பாண வளாகத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் க.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் கனவாகவும், கோரிக்கையாகவும் இருந்த பீடம், நீண்டகால முயற்சிகளின் பின் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது.

கலைப்பீடத்திற்குள் இருந்த இந்துநாகரிகம், இந்து தத்துவம், சமஸ்கிருதம் ஆகிய துறைகள் இப்பீடத்தின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன.

இப்பீடம் ஆரம்பிக்கப்பட்டது இந்து மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த போதும், மானிய ஆணைக்குழுவால் மாணவர்கள் நேரடியாக அனுமதிக்கப்படாமையால் குறைந்தளவு மாணவர்களைக் கொண்டுள்ளது கவலைக் குரியதாகவுள்ளது. கலைப்பீடத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களில் ஒரு சிறு பிரிவினரே இப்பீடத்திலுள்ள பாடங்களைத் தெரிவு செய்கின்றனர். மானிய ஆணைக்குழுவினால் இப் பீடத்திற்கு நேரடியாக மாணவர்கள் அனுமதிக்கப்படும் போதே மாணவர்கள் இப்பீடப் பாடங்களை க.பொ.த (உ/த)இல் கற்பர். இப்பீட வளர்ச்சியில் பீடாதிபதியாகவிருந்த கலாநிதி திருமதி.ஸ்ரீ.எஸ்.முரளிதரனின் பங்களிப்பும், தற்போதைய பீடாதிபதி திரு.எஸ்.பத்மநாப ஐயரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கன. இப்பீடம் மாநாடுகள் மற்றும் சமூக சமய நிகழ்வுகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

**சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய அவைக்காற்றுக் கலைகள் பீடம்**

இராமநாதன் நுண்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம் உருவாக முன்னரே 1960 இல் செனேற்றர் சு. நடேசபிள்ளையால் நிறுவப்பட்டது. இவர் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் மருகர் ஆவார்.

இக் கழகம் 1960 ஆம் ஆண்டு விஜயதசமி அன்று அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1974 இல் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது இக்கழகத்தை யாழ்ப்பாண வளாகம் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கை பல பிரிவினரால் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் 1975 ஆம் ஆண்டு இறுதியில் யாழ்ப்பாண் வளாகம் இதனைப் பொறுப் பேற்றது. அன்று இக் கழகத்தின் ஒரு சில மாணவர்கள் போதனாசிரியர்கள் மாத்திரமே இருந்துள்ளனர்.

இந் நிலையில் இக் கழகம் (RAFA) செயற்பாட்டை கலைப்பீடம் பொறுப் பேற்று கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த பல நடவடிக்கைகளை முன்னெடுத்தது. மேலும் இக் கழகத்தின் செயற்பாடுகளைக் கவனிக்க பேராசிரியர் பி.கைலாசநாதக்குருக்கள் இணைப் பாளராக நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து பேராசிரியர் கே.இந்திரபாலா, பேராசிரியர் கே.சிவத்தம்பி ஆகியோர் இணைப்பாளர்களாக கடமையாற்றி யுள்ளனர்.

இக் கழகத்தில் அன்று டிப்ளோமா கற்கைநெறிகள் மாத்திரம் இடம்பெற்ற துடன் மாணவர் சேர்க்கையையும் பல்கலைக் கழகமே கையாண்டது. இக் கழகத்தை மேம்படுத்த பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு பல சிபாரிசுகள் செய்யப்பட்டன. இதனை நிறுவனமாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். 1991 இல் பேராசிரியர் பி.பாலசுந்தரம் பிள்ளை கலைப்பீடாதிபதியாக பொறுப் பேற்ற பின்னர் இதன் வளர்ச்சிக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்தார்.

1992 இல் இராமநாதன் நுண்கலைக் கழகத்தை, கலைப்பீடத்தின் கீழ் அவைக் காற்று துறையாக மாற்றினார். (Dept of performing arts) பின்னர் 1994 இல் இத் துறை சங்கீத துறை, நடனத்துறை என இரு துறைகளாக மாற்றப்பட்டன. இக் காலத்தில் மாணவர் எண்ணிக் கையும் ஆசிரியர்களின் எண்ணிக் கையும் உட்கட்டமைப்புக்களும் விரி வடைந்தன.




1993 இல் மானிய ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு இணங்க கர்நாடக சங்கீதம், மிருதங்கம், வயலின், வீணா மற்றும் பரதநாட்டியத்தில் பட்டப் படிப்புக்கள் தொடங்கப்பட்டன.

பட்டப் படிப்புக்கள் தொடங்கிய பொழுதும் NCOMS மாணவர்களின் நலன் கருதியும் டிப்ளோமா கற்கை நெறிகளும் பட்டப்படிப்புடன் சம காலத்தில் தொடர்ந்து இயங்கி 2000 ஆம் ஆண்டில் டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள் குறைந்ததனால் நிறுத்தப்பட்டது.

1999 இல் பரதநாட்டியத்துறையின் கீழ் சித்திரம் வடிவமைப்புக் கற்கை நெறி ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் வருடத்திற்கு இத்துறைக்கு 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இராமநாதன் நுண் கலைக்கழக மாணவர் அனுமதி 1975 இல் இருந்து 2004 வரை பல்கலைக் கழகத்தாலேயே செய்யப்பட்டு வந்தது. 2004 இல் இருந்து மாணவர் அனுமதியை மானிய ஆணைக்கழு பொறுப் பேற்றுக் கொண்டது.

பரதநாட்டியத்துறை தலைவராக இருந்த பேராசிரியர் சபாஜெயராஜா, திருமதி கிருசாந்தி ரவீந்திரன் மற்றும் சங்கீதத்துறை தலைவராக இருந்த திரு. எஸ்.பத்மலிங்கம், திரு.நவரட்ணம் ஆகியோரின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு மிகவும் காத்திரமானது. பேராசிரியர் சபா ஜெயராஜா சங்கீதம் நடனம், சித்திர வடிவமைப்பு பாடங்களில் கலைத் திட்டத்தை முன்னின்று தயாரித்தவர்.

முன்னைய கலைப் பீடாதிபதிகள் துணைவேந்தர்கள் ,இராமநாதன் நுண் கலைக் கழகத்தை (RAFI) தரமுயர்த்த பல முயற்சிகள் செய்த போதும் அதில் அவர்கள் வெற்றிபெறவில்லை.

இன்றைய துணைவேந்தர் எஸ். சிறி சற்குணராஜா காலத்தில் நீண்ட கால கனவுகள் நிறைவேறியது பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். மேலும் இவ் அடைவுக்கு மானிய ஆணைக்கழுவின் அங்கத்தவர் பேராசிரியை வசந்தி அரசரட்ணத்தின் பங்களிப்பும் மிகவும் காத்திரமாக இருந்தது.

இன்று இப் பீடத்தில் கர்நாடக சங்கீதம், வாத்தியக் கருவிகள் சங்கீதம், பரதநாட்டியம், சித்திரம், சிற்பம் , நாடகமும்அரங்கியலும் என ஆறு துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நாடகமும் அரங்கியல்துறை இணுவிலில் இயங்க ஏனைய துறைகள் ஐந்தும் மருதனார் மடத்தில் இயங்குகின்றன.

திரு. எஸ். சிவரூபன் அவர்கள் பீடாதிபதியாக கடமையாற்றி வருகின்றார். இப் பீடத்திற்கு வருடாந்தம் 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். சங்கீதத்திற்கும் நடனத்திற்கும் சித்திர வடிவமைக்கு மாத்திரமே மானிய ஆணைக்குழு மாணவர்களை அனு மதித்து வரும் நிலையில் ஒவ்வொரு துறைக்கும் மாணவர்களை மானிய ஆணைக்குழு நேரடியாக அனுமதிக்க வேண்டும் என்பதே கோரிக்கையாக இருக்கின்றது.

**திறந்த தொலைக்கல்வி நிலையம்**

1991 இல் பேராசிரியர் பி.பாலசுந் தரம்பிள்ளை கலைப்பீடாதிபதியாக இருந்தபோது ஆரம்பமான வெளிவாரிக் கற்கைகள் அலகு கலை, வர்த்தகத் துறைகளில் பெரும் எண்ணிக்கையான பட்டதாரிகளை உருவாக்கியது. பல் கலைக்கழகங்களுக்கு உள்வாரி யாக உள்வாங்கப்படாத மாணவர்களுக்கும் மற்றும் பலருக்கும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வலகு வாய்ப்பினைக் கொடுத்தது.



**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**வாழ்நாள் பேராசிரியர்,**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

கலைப்பீடாதிபதியாக இருந்த பேராசிரியர்.பி.பாலசுந்தரம்பிள்ளையின் கடின முயற்சியினால் புறநிலைப் படிப்பலகு (Extra Mural Studies) 1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் விரி வாக்கமும் பல்வேறு குறுகிய கால கற்கை நெறிகளை நடாத்துவதும் ஆகும். இவ்வலகின் இணைப்பாளராக பேராசிரியர் ஆர்.சிவச்சந்திரன் கட மையாற்றி பல்வேறு கற்கை நெறி களான காரியாலய முகாமைத்துவம், புகைப்படக் கலை, சோதிடம், ஆங்கிலம், சுகாதாரம் போன்றவற்றை வார இறுதி நாட்களில் நடாத்தப்பட்டு வந்தன. தற்போது இவ்வலகு தொலைக் கல்வி நிலையத்தின் கீழ் இயங்க கொண்டு வரப்பட்டுள்ளது.

வெளிவாரிக் கற்கையலகும் புற நிலைக் கற்கையலகும் முன்னெடுத்த கல்விப் பணிகள் தற்போது திறந்த தொலைக்கல்வி நிலையத்தால் புதிய முறைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தொலைக்கல்வி நிலையம் இன்று பெரியளவிலான கற்பித்தல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. முன்னைய வெளிவாரி கற்கைகள் அலகின் செயற்பாட்டால் கிடைத்த நிதியில் இருந்து பல் கலைக் கழகத்தின் அருகாமை 17 பரப்புக் காணி கொள்வனவு செய்யப் பட்டதுடன் இவ் அலகின் வருமானத்தில் 2 மாடிக் கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது. இன்று பேராசிரியர் ஜேம்ஸ் றொபின்சன் இதன் இயக்குனராக இருக்கின்றார். இவருக்கு முன்னர் திரு.கே.சிவராஜா, பேராசிரியர் ரதி ராணி யோகேந்திரராஜா, பேராசிரியர் B.நிமலதாசன் ஆகியோர் இயக்குனர்களாக கடமையாற்றி இருந்தனர்.

**விளையாட்டு விஞ்ஞான அலகு**

1974இல் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பமானபோது விளையாட்டுக் விஞ்ஞானத்துறையும் ஆரம்பிக்க அனுமதி கிடைக்கப்பெற்றும், அது நடைமுறையில் செயற்படவில்லை. 1999 இல் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை காலத்தில் சுய நிதி அடிப்படையில் விளையாட்டுத் துறையில் 50 மாணவர்களுடன் டிப் ளோமா கற்கைநெறி தொடங்கியது. இவ்வலகு பிறவுண் வீதியில் யாழ்ப் பாணம் வடக்கு கட்டடத் திணைக்களத்தின் கட்டடத் தொகுதியில் இயங்கத் தொடங்கியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# நேட்டோ மீது தாக்
# ரஷ்யாவுக்கு அது தே

## போலந்து எச்சரிக்

(மொஸ்கோ)

**ரஷ்யா நேட்டோ மீது தாக்குதல் நடத்தினால் அ தோல்வியில் தான் முடிவடையும் இருந்த போதிலும் பாதுகாப்பை இன்னும் அதிகரிக்க வேண்டும் எ வெளியுறவுத்துறை அமைச்சர் ரடேக் சிக்கோர்ஸ்கி தெரி**

ஜரோப்பிய யூனியன் திட்டங்களை அமைக்கும் நாடுகளின் குழுவில் மீண்டும் போலந்து இணைய விரும்புகிறது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், போலந்தின் வளர்ச்சியும் பாதுகாப்பும் அட்லாண்டிக் கடல்கடந்த ஒத்துழைப்பு மற்றும் ஜரோப்பிய ஒருங்கிணைப்பு ஆகிய இரண்டின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

போலந்து உலகளாவிய சவால்களுக்கு பொறுப்பேற்கத் தயாராக உள்ளது. ஜேர்மனி உடனான நட்பு முக்கியமானது.

நேட்டோ அமைப்பில் உள்ள போலந்து ரஷ்யா ,பெலாரஸ் எல்லைகளை பகிர்ந்துள்ளது. மேலும், உக்ரைன் எல்லையையும் பகிர்ந்துள்ளது.

மேற்கத்தேய நாடுகளில் ஆயுதங்கள் உக்ரைனுக்கு செல்ல முக்கிய புள்ளியமாக அமைந்துள்ளது.

இரண்டு ஆண்டுகளை

---

### ஐ.எஸ்.பயங்கரவாதிகள் 11 பேருக்கு
## ஈராக்கில் மரணதண்டனை

(டெஹ்ரான்)

ஈராக்கில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. நசிரியா மத்திய சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த 11 பேருக்கும் மரண தண்டனை நிறை வேற்றப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பை ஈராக் இராணுவம் கடந்த 2017 ஆம் ஆண்டு தோற்கடித்தது.

இதன்போது ஏராளமான ஐ.எஸ் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதோடு நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(நி-6)

---

### இத்தாலியை சுற்றிப்பார்க்க
## அதிக பணம் வசூல்



(ரோம்)

படகு போக்குவரத்தை அடிப்படையாகக் கொண்டும் இயற்கை அழகுகளை அடிப்படையாக கொண்டும் இத்தாலியின் வெனிஸ் நகரம் சுற்றுலா நகரமாக விளங்குகிறது.

வெனிஸ் நகரை படகுகளில் அமர்ந்து சவாரி செய்தவாறு ரசிப்பதற்காகவே வெளிநாட்டினர் பலர் இங்கு சுற்றுலா வருவர். இந்த நிலையில் சுற்றுலாப்பயணிகளின் வருகையை கட்டுப்படுத்த நகர நிர்வாகம் கட்டண நடைமுறையை அமுல்படுத்தி உள்ளது.

வெனிஸ் நகரை சுற்றிப் பார்க்க ஒருநாள் கட்டணமாக (5யூரோ) வசூலிக்கப்பட உள்ளது. 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், நகரவாசிகள், ஆராய்ச்சி மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பருவ நாட்களில் கட்டணத்தை அதிகரிக்கும் எண்ணமும் உள்ளதாக நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த புதிய நடைமுறை சுற்றுலா ஆர்வலர்களிடம் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. (நி-6)

---

## தாய்லாந்தில் கடும் வெப்பம்
### 30 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் இந்த ஆண்டு அதிக வெப்பமான காலநிலை காரணமாக 30 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு மற்றும் தென்கிழக்காசியா முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் கடுமையான வெப்பம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தாய்லாந்தின் பாங்கொக்கில் வெப்பநிலை 52 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நிலவும் காலநிலையை கருத்திற் கொண்டு குறித்த பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை பிலிப்பைன்சில் அதிக வெப்பத்தாக்கம் காரணமாக இந்த ஆண்டு இதுவரை 6 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

---

## வெள்ளை மாளிகைக்கு அருகில்
### பாலஸ்தீனியர்களிற்கு ஆதரவாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு அருகில் அமெரிக்க மாணவர்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவின் ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக மாணவர்கள் வோஷிங்டனில் ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைகழகத்திற்கு அருகில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

காசா யுத்தத்தின் மத்தியில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவும் அமெரிக்க பல்கலைக்கழகங்கள் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களில் தங்களுக்கு உள்ள தொடர்பை முறித்துக்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதற்காகவும் வோஷிங்டனைச் சேர்ந்த மாணவர்களும் பேராசிரியர்களும் செயற்பாட்டாளர்களும் அங்கு குழுமியுள்ளனர்.

அமெரிக்காவின் ஏனைய பல்கலைக்கழகங்களை போல ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைகழகத்திலும் மாணவர்கள் வளாகத்தில் கூடாரம் அமைத்து தங்கியிருந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழக மாணவர்களிற்கான எங்கள் ஆதரவை வெளிப்படுத்துவதற்காகவும் அமெரிக்காவின் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காகவும் நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம் என அனா வெசெல்ஸ் என்ற மாணவி அல்ஜசீராவிற்கு தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகைக்கும் இராஜாங்க திணைக்களத்திற்கும் அருகில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

தலைநகரில் நாங்கள் எதனையாவது செய்யாவிட்டால் நாங்கள் எங்கள் தார்மீக கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை என்பதே அர்த்தம் என மாணவி வெசெல்ஸ் தெரிவித்துள்ளார். (நி-6)

---

## இந்
### 2 ஆ

(டில்ல

இந்

தல் 7 க

வருகின்

இதி

த்தின்

102 தெ

ஆம் தி

பெற்றது

## அ

## 10



(கன்

அவு

யில் 10

திமிங்க

கியுள்ள

றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ங்குதல் நடத்தினால் ...தோல்வியாக முடியும்

## ...கை



... அது அவர்களுக்கு ...லும் நேட்டோ தனது ... என அந்நாட்டின் ...தரிவித்தார்.

...தாண்டி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

அவ்வப்போது உக்ரைன் மீது ரஷ்யா ஏவும் ஏவுகணைகள் எல்லையில் உள்ள போலந்துநாட்டின் வான் எல்லைக்குள் செல்வ துண்டு. இதற்கு போலந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது

மேலும் எல்லைப்பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்தி உள்ளது.

ஒரு வேளை போலந்து நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்தால் நேட்டோ அமைப்பில் உள்ள அனைத்து நாடுகளும் ஒன்றாக இணைந்து ரஷ்யாவுக்கு எதிராக நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆனால், இதற்கான அவசியம் இது வரைஏற்படவில்லை .

உக்ரைனுக்கு எதிரான போரில் மேற்கத்தேயநாடுகள் தலையிட வேண்டாம் என ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ...ந்தியா பாராளுமன்ற தேர்தலின் ... ஆம் கட்ட வாக்குப் பதிவு ஆரம்பம்

(டில்லி)

...இந்திய பாராளுமன்ற தேர் ... 7 கட்டங்களாக நடைபெற்று ...றுகின்றது.

...இதில் முதற்கட்டமாக தமிழக ...தின் 39 தொகுதிகள் உட்பட ...2 தொகுதிகளில் கடந்த 19 ...ம் திகதி வாக்குப்பதிவு நடை...ற்றது. 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடந்த இந்த தேர்தலில் 65.5 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன.

இதைத்தொடர்ந்து 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்றது.

2 ஆம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெற்றது. வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் , 2 ஆம் கட்ட தேர்தலில் வாக்களிக்க தகுதி வாய்ந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 15.88 கோடியாகும்.(நி-6)

# ...அவுஸ்திரேலியாவில் கரையொதுங்கிய ...00 இற்கும் மேற்பட்ட திமிங்கலங்கள்



(கன்பெரா)

அவுஸ்திரேலிய கடற் கரை... 100 இற்கும் மேற்பட்ட ...திமிங்கலங்கள் கரை ஒதுங்...உள்ளதாக தெரிவிக்கப்படுகி...

இவ்வாறு கரை ஒதுங்கி சிக்கித்தவிக்கும் பைலட் திமிங் கலங்களைக் காப்பாற்ற கடல் உயிரியலாளர்கள் தீவிர முயற்சி யில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் கரை ஒதுங்கிய 20 பைலட் திமிங்கலங்கள் பரிதாபமாக உயிரிழந்தன.

அவுஸ்திரேலியாவின் தென் மேற்கு பகுதியான இன்லெட்டில் 160 பைலட் திமிங்கலங்கள் நேற்று முன்தினம் காலை கரையொதுங்கி உள்ளன.

ஆபத்தான நிலையில் இருந்த 26 திமிங்கலங்கள் கரையில் மூச்சு விட முடியாமல் இறந்தன. ஏனைய திமிங்கல ங்களை மீட்டு கடலில் விடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு திமிங்கலம் கரையில் தவறுதலாக மாட்டிக் கொண்ட நிலையில் அடுத்தடுத்து திமிங்கலம் வரிசையாக கரையில் சிக்கி இருக்கலாம் என அந்நாட்டின் கடல் வாழ் உயிரியலாளர் தெரிவித்துள்ளார். (நி-6)

# கென்யாவில் கனமழை 32 பேர் உயிரிழப்பு



(நைரோபி)

கென்யாவில் பெய்து வரும் கனமழை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 32 ஆக உயர்வடைந்துள்ளது.

ஆபிரிக்க நாடான கென்யாவில் கடந்த ஒரு வாரமாக வரலாறு காணாத அளவில் கனமழை பெய்து வருகிறது.

இதனால் தாழ்வான பகுதிகளில் நீரின் அளவு அதிகரித்து வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

மேலும் கரையோரங்களில் வசித்துவந்த 2 இலட்சம் மக்களும் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கென்ய தலைநகர் நைரோபி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம்திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ள நீர் பல்வேறு பகுதிகளில் புகுந்தமையால், குடியிருப்பு கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் மூழ்கியுள்ளன.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களும் இதனால் சேதமாகியுள்ளன.

வெள்ள அனர்த்தத்தினால் போக்குவரத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் இதனால் மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை, மற்றும் வெள்ளத்தில் சிக்குண்டு இதுவரை 32 பேர் உயிரிழந்துள்ளதாக கென்யாவின் பேரிடர் மீட்பு நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், பலர் காயமடைந்துள்ள நிலையில், அவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தேர்தலில் வெற்றியீட்டிய பின் சீனாவுக்கு விஜயம் செய்யும் புடின்



(பீஜிங்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் மே மாதம் சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கன் நேற்று முன்தினம் சீனாவுக்கு உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையிலேயே, புடின் குறித்த பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு சீன ஜனாதிபதியுடன் எல்லையற்ற உடன்படிக்கையொன்றை விளாடிமிர் புடின் கைச்சாத்திட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து, கடந்த ஒக்டோபர் 2023 ஆம் ஆண்டு இறுதியாக ரஷ்ய ஜனாதிபதி சீனாவுக்கு பயணம் செய்திருந்தார்.

இந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற தேர்தல்களில் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து முதல் தடவையாக தற்போது சீனாவுக்கு அவர் பயணம் செய்யவுள்ளமை உலகளாவிய ரீதியில் உற்றுநோக்கலை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமானது நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வலம்புரி விடுதியில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் வி.சக்திக் குமரன் தலைமையில் நடைபெற்றது. (படம்-சதீஸ்)

# தரக்குறைவான அரிசி தொடர்பில் உடனடி விசாரணை அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளுக்கு வழங்கப்பட்ட தரக்குறைவான அரிசி தொடர்பில் விசாரணை நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.ஏப்ரல் மாதம் முதல் அரிசி வழங்கும் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. அந்த திட்டத்தை நாங்கள் பாராட்டுகிறோம்.

ஆனால் தேர்வு நடைமுறையில் கடுமையான சிக்கல்கள் உள்ளன. சில இடங்களில் தரமற்ற அரிசி விநியோகம் நடக்கிறது. அவ்வாறானதொரு சம்பவம் ஹாலிஎல பிரதேசத்தில் இருந்து பதிவாகியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றும் ராஜித கீர்த்தி தென்னகோன் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விநியோகிக்கப்பட்ட அரிசியின் தரத்தை பராமரிக்க வேண்டும். ஏனெனில் இவை நம் நாட்டு மக்களுக்கு கொடுக்கப்பட்டவை" என தெரிவித்தார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 80 | 100-150 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 140 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 80-100 | 120 |
| தக்காளி | 100 | 80 | 70 | 100-160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100-140 | 150 |
| கோவா | 160 | 160 | 150 | 150 | 250 |
| கரட் | 300 | 300 | 280 | 270 | 300 |
| பூசணி | 100 | 140 | 80 | 100 | 120 |
| புடோல் | 120 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 330 | 300 | 250-320 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 250 | 220 | 300 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 140 | 60 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | - | 150 |
| பயற்றங்காய் | 150 | 150 | 250 | 150-200 | 120 |
| லீக்ஸ் | 250 | 260 | 220 | 200 | 250 |
| பீற்றூட் | 200 | 150 | 180 | 250 | 300 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 650 | 400 | 400-650 | 600 |
| போஞ்சி | 200 | 300 | 300 | 200 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 80-100 | 120 |
| தேசிக்காய் | 800 | 700 | 500 | 500-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 90 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 150 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | -- |

# இன்று ஒரு தகவல் 107



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஆறுவது சினம்

எனக்கு தெரிந்த ஒரு பெரியவர். ஆன்மீகத்திலே அதிக ஈடுபாடு அவருக்கு. அதே நேரத்திலே அரசாங்கத்திலே பொறுப்பான உத்தியோகம் அவருக்கு. இரண்டு பக்கமும் குறையில்லாத அளவுக்கு கவனித்துக் கொண்டு இருந்தார். எல்லாவற்றிலும் அவர் மிகவும் கெட்டிக்காரர். அவராலே முடியாத காரியம் என்று ஒன்று உண்டு என்றால் அது பேசாமல் இருப்பது தான்! ஆமாம். அவருக்கு எப்பவும் எதைப்பற்றியாவது யாருக்கிட்டேயாவது பேசிக் கொண்டே இருக்க வேண்டும்.

மௌனமாக இருக்கிறது அவரைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப கஷ்டமான காரியம்! அப்பேற்பட்ட அவர் என்ன செய்வார் என்றால்... வாரத்திற்கு ஒரு நாள் மௌனவிரதம் இருப்பார். அதுவும் அலுவலகத்திலே வழக்கமாக புதன்கிழமை அன்று அப்படி இருப்பார். வேலை செய்கின்ற ஆட்களிடம் பேசவே மாட்டார். ஆனால் அலுவலக வேலை எல்லாம் ஒழுங்காக நடைபெறும். ஏங்க மௌனமாக இருக்கிறது தான் உங்களுக்கு ரொம்ப கஷ்டமானதே! அப்படி இருக்கின்றபோது என்னத்திற்கு மௌனவிரதம்? அப்படி என்று அவரைப் பார்த்து ஒரு நாள் கேட்டேன். நமக்கு எது கடினமான செயலோ அதைச் செய்வது தான் பெருமை என்று அவர் பதில் சொன்னார். அவருக்கு கீழே அந்த அலுவலகத்திலே வேலை செய்கின்ற இன்னொருத்தரையும் எனக்குத் தெரியம். அந்த ஆள் சொன்னார்.

இதே பாருங்கள் எங்க உத்தியோகத்தர் அவருக்குக் கடினமான ஒரு காரியத்தையும் ஒவ்வொரு புதன்கிழமையும் செய்கிறார். அதே மாதிரி எங்களுக்குக் கடினமான ஒரு காரியத்தையும் அதே புதன்கிழமை அன்றைக்கு முடித்துக் கொள்ளுகின்றோம்.என்னங்க அது என்று கேட்டேன். வேறு ஒன்று இல்லை நிறைய பைல்களிலே அன்றைக்குத் தான் அவரிடம் கையெழுத்து வாங்குவோம்! சம்பள பில் உட்பட! வாய் பேசாமே போட்டு விடுவார்! மற்ற நாள் என்றால் ஆயிரம் கேள்வி கேட்டுக் கொண்டு இருப்பார். இவரும் பெருமைப்பட்டுக் கொண்டார். ஏன் என்றால் அவர் ஒரு கடினமான செயலை அன்றைக்கு முடித்து விடுகிறார் அல்லவா? ஒரு பையன் இருந்தான் ஒளிவு மறைவு இல்லாத சுபாவம் அவனுக்கு! அவனிடம் என்ன குறை என்றால் அவசரப்பட்டு சிந்திக்காமல் உணர்ச்சி வேகத்திலே எதையாவது செய்து விடுவான். பட் என்று கோவம் வந்துவிடும். ஒரு நாள் அரவிந்தர் அந்தப் பையனைப் பார்த்தார் தம்பி நீ ரொம்ப புத்திசாலிதான் அதிலே ஒன்றும் சந்தேகமில்லை. உன்னாலே எல்லாம் முடியும். அந்த அளவுக்கு வலு இருக்கிறது உன்னிடம்! இருந்தாலும் நான் இப்போது உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் என்றார்.

கேளுங்கள் என்றான் பையன். உன்னை மாதிரி பலசாலியாக உள்ள பையனுக்கு கடினமான செயல் எது? அடிக்கு அடி கொடுக்கிறதா? அதாவது உன்னை ஒருவர் அவமதித்து விட்டா? உடனே அவன் முகத்திலே ஒரு குத்து விடுவது கடினமான செயலா? இல்லை அந்த நேரத்திலே உன் கையை கெட்டியாக மூடிக்கொண்டு காற்சட்டைப் பைக்குள்ளே வைத்துக் கொள்வது கடினமான செயலா? என்று கேட்டார் அரவிந்தர். என்னைப் பொறுத்தவரைக்கும் உடனே அவன் முகத்திலே ஒரு குத்து விடுவது ரொம்ப சுலபம். அந்த நேரத்திலே கையை மூடிக் கொண்டு சும்மா இருக்கிறது ரொம்ப கஷ்டம் என்றான் பையன். உன்னை மாதிரி வீரமுள்ள பையனுக்கு எது பெருமை? சுலபமான காரியத்தைச் செய்வதா? கடினமான காரியத்தை செய்வதா? என்று கேட்டார் இவர். பையன் கொஞ்சம் தயங்கினான்... யோசித்தான். கடினமான செயலைச் செய்வது தான் பெருமை! என்றான்.ரொம்ப நல்லது இன்னொரு தடவை சந்தர்ப்பம் வரும் போது நீ அது மாதிரி நடந்து கொள்! என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

கொஞ்ச நாள் கழித்து ஒரு நாள். அந்தப் பையன் அரவிந்தரைத் தேடி வந்தான் நியாயமான பெருமையோட அவர் முன்னாடி நின்றான். என்னாலே அதிக கடினமான செயலை செய்ய முடிந்தது என்றான் என்ன நடந்தது என்று விசாரித்தார். பையன் சொன்னான். ஐயா என் கூட வேலை செய்யிற பையன் ஒருவன் ரொம்பவும் முன் கோபக்காரன் என்று பேர் வாங்கினவன். அவன் கோபத்திலே என்னை அடித்துவிட்டான். உடனே நான் திருப்பி அடித்து விடுவேன் என்று அவன் எதிர்பார்த்தான். அதற்குத் தகுந்த மாதிரி எச்சரிக்கையாக இருந்தான். அந்த சமயத்திலே எனக்கு நீங்கள் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது! அது நான் நினைத்ததை விட கடினமாகத் தான் இருந்தது. இருந்தாலும் நான் கையை கெட்டியாக மூடி காற்சட்டைக்குள்ளே போட்டுக்கொண்டேன். அப்படி செய்ததும் என்னோட கோபம் எல்லாம் போய்விட்டது. அவனுக்காக நான் கோபப்படவில்லை. வருத்தப்பட ஆரம்பித்து விட்டேன். கொஞ்ச நாள் கழித்து அவன்கிட்டே கைகுலுக்குவதற்காக என் கையை நீட்டினேன். அவனுக்கு ரொம்ப ஆச்சரியமாக போய்விட்டது. அப்படியே என்னை கட்டிப்பிடித்துக் கொண்டான். அது மட்டுமில்லை. இப்போது நீ என்ன வேணும் என்றாலும் செய்யலாம் நான் என்றைக்கும் உன்னோட நண்பன் என்று சொன்னதும் அரவிந்தருக்கு ரொம்ப மகிழ்ச்சி.இந்தக் கதையை இன்றைக்கு உங்களிடம் சொல்லுவதற்கு முன்னாடி என் சிநேகிதன் ஒருவனிடம் சொன்னேன்.

அவன் கொஞ்சம் முன் கோபக்காரன். சொல்லி இரண்டு நாள் கழித்து அவனை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை. அதனாலே அவன் முன்னாடி போய் நின்று கொண்டு கோபம் வருகிற மாதிரி பேசினேன். என்ன ஆச்சரியம்? அவன் தன்னோட காற்சட்டை பையிலே கையை கெட்டியாக மூடி வைத்துக் கொண்டு வெளியே எடுக்கவில்லை. கன்னா பின்னா என்று திட்டினேன். அப்பவும் கையை எடுக்கவில்லை. சும்மாவாவது கன்னத்திலே பளார் என்று அறைந்து பார்த்தேன். அவன் அசைந்து கொடுக்கவில்லை. எனக்கு ரொம்பவும் பெருமையாக இருந்தது. மறு நாள் அவரைத் தேடிப் போய் என்னுடைய பாராட்டை தெரிவித்துக் கொண்டேன். அவன் என்னைப் பார்த்தவுடனே. அன்றைக்கு ஏதோ உன்னோட நல்ல காலம் நீ என்னிடம் அறை வாங்காமல் தப்பித்துக் கொண்டாய். இன்றைக்கு வேணும் என்றால் அப்படி செய்துபாரேன் என்று சவால் விட்டான் என்னடா விடயம்? என்று கேட்டேன். அன்றைக்கு லட்டு ஒன்று கையிலே வைத்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன். நீ வந்து கொண்டு இருந்ததைப் பார்த்ததும் அப்படியே காற்சட்டை பையிலே மறைத்துக் கொண்டேன். அந்த சமயம் பார்த்து நீ அறைந்து விட்டாய்! அது தான் தப்பித்துக் கொண்டாய் என்றான்.சரி வருகிறேன் என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு நான் வந்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற அரிசி விநியோகம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்



(நெளுக்குளம்)

தரமற்ற அரிசி விநியோகம் இடம்பெறுவதாக குற்றச்சாட்டு கிடைக்கப்பெற்றுள்ளது. அவ்வாறு இடம்பெற்றிருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரால் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான அரிசி விநியோகம் இடம் பெற்றுவரும் நிலையில் சில இடங்களில் காலாவதியான பாவனைக்குதவாத அரிசி வழங்கப்படுவதாக குற்றச்சாட்டு கிடைக்கப் பெற்றுள்ளது.

அவ்வாறு வழங்கப்பட்ட விநியோகம் தொடர்பாகவும் அதனை விநியோகித்த விநியோகத்தர் தொடர்பாகவும் முழுமையான தகவல்களை வழங்குமாறும் தரமற்ற அரிசி வழங்கப்பட்டிருப்பின் விநியோகத்தர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை கிராம சேவகர் ஊடாக, பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளரை தொடர்பு கொண்டு தெரிவிக்க அறிவுறுத்தல் வழங்குமாறும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-299)

# சஜித்தன் நினைவுக்கிண்ணம் வெற்றிவாகை சூடியது தியோநகர்



(நெளுக்குளம்)

முள்ளியவளையில் 2024 ஆம் ஆண்டுக்கான சஜித்தன் நினைவுக்கிண்ணம் இறுதிப் போட்டியில் சம்பியனான சிலாவத்தை தியோநகர் அலைகள் விளையாட்டுக்கழகம். முல்லைத்தீவு முள்ளியவளையில் 2024 ஆம் ஆண்டுக்கான சஜித்தன் நினைவுக்கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை முள்ளியவளை நாவற்காட்டு கிராமத்தில் அமைந்துள்ள ஐங்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

விளையாட்டுக்கழக தலைவர் க.நாதன் தலைமையில் ஆரம்பமான குறித்த இறுதி போட்டியில் முள்ளியவளை வித்தியா விளையாட்டுக்கழகம் மற்றும் சிலாவத்தை தியோநகர் அலைகள் விளையாட்டு கழகமும் மோதின.

இரண்டு அணிகளும் பலப் பரீட்சையில் ஈடுபட்டு இறுதியில் தியோநகர் அலை விளையாட்டுக் கழகம் 2: 1 எனும் விகிதத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கலைமகள் மகாவித்தியாலய அதிபர் ஜெயகாந், கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஜெகதீசன், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் எனஸ்டீன், ஆன்மீக ஜோதி செல்வகுமார், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-299)

## பெண் தலைமைத்துவ குடும்பத்தின்

# மிளகாய் தோட்டத்தை நாசப்படுத்திய விஷமிகள்

(கிளிநொச்சி)

விசுவமடு கல்லாறு பகுதியில் மிளகாய்த் தோட்டம் அதற்கு பயன்படுத்தப்படும் நீர்ப்பாசன இயந்திரங்கள் இனம் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.


நேற்று முன்தினம் இரவு குறித்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவி திட்டத்தின் கீழ் பல இலட்சங்கள் செலவு செய்து மேற்கொள்ளப்பட்ட மிளகாய்த் தோட்டம் இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது. குறித்த தோட்டத்தினூடாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்த நிலையில் தமது ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக தோட்ட உரிமையாளர் கவலை தெரிவித்தார். (நி-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3100

Search for people, places and things

### அஸ்ரின்



மாமியார் மருமகளிடம் தேங்காய் போட்டு குழம்பு வைக்க சொன்னார்களாம். இன்னும் மாமியாருக்கு மயக்கம் தெளியவில்லையாம்

### பரீனா

காகம் கரைந்தது வீட்டிற்கு விருந்தாளிகள் வருகை என்று...



சேவல் பதறியது இன்று விருந்தாக போகிறோம் என்று

### ரஞ்சன்

எப்படி இருக்கிறாய் மச்சான்?
எப்பவும் போல தான்
நல்ல வேளை எங்க நல்லா இருக்கேன் என்று சொல்லுவியோ என்று பயந்திட்டேன்



### சயானா


தெரியாதவன் ஏமாத்துவான் என்று பயந்து தெரிந்தவனிடம் போனால்



அவன் இவனைவிட பெருசா ஏமாத்துவான்... இது தான் சார் உலகம்!

### றியாஸ்

நல்லா படித்து வாழ்க்கையில் ஒரு ஸ்டேட்டஸ்க்கு வரனும் என்று ஆசைப்பட்டவர்கள் எல்லாம். இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா



வாழ்க்கையில் நடக்கும் எல்லாவற்றையும் வட்ஸ்அப் ஸ்டேட்டஸ் வைத்து கொண்டு இருக்கிறாங்கள்

### தாக்சா

மே 4 ஆம் திகதி முதல் கத்தரி வெய்யில்



இப்ப மட்டும் என்ன தக்காளி வெய்யிலா அடிக்குது?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 466





பொன்னியின் செல்வரைச் சிறைப்படுத்திக் கொண்டு போகவா நாம் வந்திருக்கிறோம்?' என்று வினவினார்கள். கலபதி உண்மையைக் கூறினான். "நாம் இராஜாங்க சேவையில் இருப்பவர்கள். சக்கரவர்த்தியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர்கள்" என்றான்.

"எங்களால் அது முடியாது இது சக்கரவர்த்தியின் கட்டளையும் அல்ல! பழுவேட்டரையர்களின் கட்டளை" என்றார்கள்.

"பின்னே நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள்?" என்று கலபதி கேட்டான்.

"மாதோட்டம் சென்று இளவரசருடன் சேர்ந்து கொள்ளப்போகிறோம்."

"மாதோட்டத்தில் இளவரசர் இல்லையே!"

"இல்லாவிடில் சேனாதிபதி கொடும்பாளூர் வேளாரிடம் சரண் அடைவோம்."

கலபதி அவர்களுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை. கலபதியுடன் நிற்பதற்குப் பழுவேட்டரையர்களின் அந்தரங்க ஆட்கள் உட்படச் சுமார் பத்துப் பேர்தான் சம்மதித்தார்கள். பத்துப்பேரை வைத்துக்கொண்டு இருநூறு பேரை என்ன செய்ய முடியும்?

"சரி அப்படியானால் இப்போதே போய்த் தொலையுங்கள்! பின்னால் வருகிறதையும் அனுபவித்துக் கொள்ளுங்கள்! என்னால் இயன்றவரையில் என் கடமையை நான் செய்வேன்!" என்றான் கலபதி.

மாலுமிகளில் பலர் இரண்டு கப்பல்களில் ஒன்றைச் செலுத்திக் கொண்டு மாதோட்டம் போகலாம் என்று உத்தேசித்தார்கள். மற்றும் சிலர் அதை ஆட்சேபித்தார்கள். ஆகவே கப்பலிருந்து இறங்கித் தரைமார்க்கமாகவே புறப்பட்டார்கள். புறப்படும் அவசரத்தில் அவர்கள் ஏறியிருந்த கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்சவில்லை. கப்பல் நகர்ந்து நகர்ந்து சென்று கரைதட்டி உடைந்து மண்ணில் புதைந்துவிட்டது.

இதற்குப் பிறகு கலபதி மற்றொரு கப்பலுடன் அங்கேயிருக்க விரும்பவில்லை. காங்கேசன் துறையில் அவன் ஒரு செய்தி கேள்விப்பட்டிருந்தான். சில நாளைக்கு முன்பு முல்லைத்தீவுக்குப் பக்கத்தில் அரபு நாட்டுக் கப்பல் ஒன்று உடைந்து முழுகிவிட்டதென்றும், அதிலிருந்து தப்பிப் பிழைத்த மூர்க்க அராபியர்கள் சிலர் அந்தப் பக்கத்தில் திரிந்து கொண்டிருந்ததாகவும் சொன்னார்கள். எனவே, கரைதட்டிப் புதைந்த கப்பலுக்குப் பக்கத்தில் இன்னொரு கப்பலையும் நிறுத்தி வைக்க அவன் விரும்பவில்லை. நன்றாயிருந்த கப்பலை அங்கிருந்து அப்புறப்படுத்திக் கொண்டு போனான். கடல் அடுத்தபடியாகப் பூமிக்குள் சென்றிருந்த குடாவில் கொண்டு போய் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தினான்.

பின்னர் கலபதி தன்னுடன் இருந்த மாலுமிகளுடன் கரையில் இறங்கி மேலே செய்ய வேண்டியதைப் பற்றி அவர்களிடம் கலந்து ஆலோசித்தான். அவன் மட்டும் தனியாகச் சென்று இளவரசரிடம் கட்டளையைச் சேர்ப்பிப்பதாகவும் அதுவரையில் மற்றவர்கள் கப்பலைப் பத்திரமாகப் பாதுகாத்து வர வேண்டும் என்றும் சொன்னான். மாலுமிகள் தங்கள் கவலைகளைக் கலபதியிடம் தெரிவித்துக் கொண்டார்கள். அவர்களுக்குக் கலபதி தைரியம் கூறிக் கொண்டிருக்கும்போதே பயங்கரக் கூச்சல்களைப் போட்டுக் கொண்டு சில மனிதர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள். அவர்கள் அரபு நாட்டார் என்பது தெரிந்தது. தமிழ் மாலுமிகள் அச்சமயம் இந்தத் தாக்குதலை எதிர்ப்பார்க்கவில்லை. சண்டைக்கு ஆயத்தமாகவும் இருக்கவில்லை. கையில் கத்திகளும் வைத்திருக்கவில்லை. எனினும் தீரத்துடன் போராடினார்கள். போராடி எல்லாரும் உயிரை விட்டார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இரட்டைத் தலைக் கொக்கு

ஒரு அடர்ந்த காட்டுக்குள்ள இரட்டை தலை கொக்கு ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் இந்த கொக்க ரொம்பவே வித்தியாசமா பார்த்து ரசிச்சிட்டு இருந்தாங்க. இந்த கொக்கு பார்க்க ரொம்பவே அழகா இருந்துச்சு.

அந்த இரண்டு தலையில் ஒரு தலை எப்பவுமே அகங்காரம் பிடிச்சதா இருக்கும். ஆனால் இன்னொரு தலை எல்லாத்துக்குமே அடங்கி போய்க்கொண்டு இருந்தது. அந்த அகங்காரம் பிடித்த தலை, இன்னொரு தலையை எப்பவுமே அதிகாரம் பண்ணிட்டு இருந்து.



ஒரு நாள் இவங்க ரொம்ப தூரம் பறந்து கொண்டு இருந்தார்கள். ரொம்பவே களைப்பாக இருந்ததால் அவங்க ரெண்டு பேரும் ஒரு குளத்தில தண்ணி குடிக்க போனாங்க.

அந்த அகங்காரம் பிடிச்ச தலை ஆவேசமாக தண்ணியை குடித்து விட்டு இருந்து. அப்போ இன்னொரு தலை பக்கத்தில இருந்த செடி ஒன்ற பார்த்தது. அதில அழகான பழம் ஒன்று இருந்தது. அதைப் பார்த்ததும் இந்த கொக்கு அந்த பழத்தை சாப்பிடுவதற்கு நினைத்தது.

இந்த இரண்டு தலையும் மாறிமாறி அந்தப் பழத்துக்காக சண்டை போட்டு கொண்டு இருந்தாங்க. அப்போ அந்த அகங்காரம் பிடித்த தலை சொல்லியது. "சரி நீயே அந்த பழத்தை சாப்பிடு என்று. அவங்க அந்த செடிக்கு பக்கத்துல போனபோது அந்த அகங்காரம் புடித்த தலை சொல்லியது. "இந்த பழம் பாக்குறதுக்கு விஷம் உள்ள பழம் போல இருக்குது".

அப்போ இன்னொரு தலை சொல்லியது, "இல்லை நீ அந்த பழத்தை நான் சாப்பி டாம இருப்பதற்கா தான் நீ பொய் சொல்லுறாய் அந்த பழத்தை நான் சாப்பிடப் போறேன்" என்றது.

அந்த அகங்காரம் பிடித்த தலை சொல்லியது "இல்ல நம்ம இரண்டு பேருக்குமே ஒரே வயிறு தான் நீ அந்த பழத்தை சாப்பிட்டா நானும் தான் உன் கூட சேர்ந்து செத்துப் போயிருவேன் அதனால அந்த பழத்தை சாப்பிட வேணாம் என்று என்று எவ்வளவு சொல்லியும் இன்னொரு தலை அதோட பேச்சைக் கேட்கவே இல்லை.

அது அந்தப் பழத்தை எடுத்து உடனே சாப்பிட்டது. அதை சாப்பிட்ட கொஞ்ச நேரத்தில் இரண்டு பேரும் மயக்கம் போட்டு கீழே விழுந்து செத்துப் போயிட்டாங்க.

நீதி : எப்போதும் ஒரு செயலை செய்யும் முன் ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தல் தமிழ்த் தரப்பின் முடிவு என்ன?

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளிவரவிருக்கின்றது.

தவிர, தேர்தல் களத்தில் இறங்குவதற்கு தென்பகுதி அரசியல் தரப்புகள் தயாராகி விட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவேன் என்ற தகவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஆக, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கவுள்ளார் என்ற தகவல் பல விடயங்களைத் தெளிவுபடுத்துகிறது.

அதில் மொட்டுக்கட்சியின் ஆதரவுடனேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளார் என்ற விடயம் ஊகிக்கப்படக்கூடியது.

ஆம், மொட்டுக்கட்சியின் சார்பில் ராஜபக்ஷ தரப்பில் எவர் போட்டியிட்டாலும் அவர்களுக்கான வெற்றிவாய்ப்பு என்பது மிகக் குறைந்த மட்டத்திலேயே உள்ளது.

அதிலும் பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கினால், வெற்றி கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டு என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோதுதான் அதனைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் முயற்சியில் மொட்டுக் கட்சி ஈடுபட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் பசில் ராஜபக்ஷவைக் களமிறக்குவதா? அல்லது மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவை போட்டியிடச் செய்வதா? என்ற வாதங்கள் எல்லாம் மக்களின் மனநிலையை அறிவதற்கான ஏற்பாடுகளே.

இவ்வாறு சில பெயர்களை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் யாரைக் களமிறக்குவது என வாதிட்டபோது, ராஜபக்ஷ தரப்பு மீது மக்கள் கொண்ட வெறுப்பு இன்னமும் தணியவில்லை என்ற உண்மையை மொட்டுக் கட்சி முழுமையாக அறிந்து கொண்டது.

அதேநேரம் எடுத்த எடுப்பிலேயே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப் போகின்றோம் எனக் கூறினால், அது ரணில் விக்கிரமசிங்கவை உசார்ப்படுத்தி விடும்.

அவ்வாறானதொரு செயற்பாடு தமது கட்டுப்பாட்டை ரணில் மீறுவதற்கு வழிவகுக்கும்.

எனவே ரணில் விக்கிரமசிங்கவையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியவாறு மொட்டுக் கட்சி தனது வியூகத்தை அமைத்துக் கொண்டது.

அதாவது ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் களத்தில் இறக்குவதன் மூலமே ஏனையவர்களுக்கான வெற்றி வாய்ப்பைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்பது ராஜபக்ஷ தரப்பின் முடிவு.

அந்த முடிவை எடுப்பதற்காக அவர்கள் பெறுமதியான கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிடுவது உறுதியாயிற்று.

இங்குதான் தமிழ்த் தரப்புகளின் நிலைப்பாடு என்ன? அவர்கள் பொதுவேட்பாளரை நிறுத்தப் போகின்றனரா? அல்லது யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார்களா? அல்லது தமிழ் மக்களிடம் அந்த முடிவை விட்டுவிடப் போகிறார்களா? என்ற கேள்விகள் இன்னமும் அமுங்கிக் கிடக்கின்றன.

எனவே காலம் தாழ்த்தாமல் தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டு ஏகமனதான முடிவை எடுத்தாக வேண்டும்.

காலம் கடத்துகின்ற ஒவ்வொரு கணமும் எங்கள் தீர்மானம் நீர்த்துப்போக வாய்ப்புண்டு.

## இளவாலை திருமறைக்கலாமன்றத்தின் வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு இளவாலையில் அமைந்துள்ள கலைத்தூது கலைக் களரியில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் செ.பியன் வெனு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி சா.சிவரூபன், கௌரவ விருந்தினராக திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மதத் தலைவர்களின் ஆசியுரைகள், வெள்ளி விழா மலர் வெளியீடு, நடனங்கள், நாடகம், நாட்டிய நாடகம், "பண்டாரவன்னியன்" நாட்டுக்கூத்து உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (நி-6)

## எழுதுமட்டுவாழ் பகுதியில் இரு வேறு விபத்துக்கள் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் ஊடாக பயணித்த மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் காணப்பட்ட மரத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 21 வயதான இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் எழுமட்டுவாழ் பகுதியில் இடம் பெற்ற மற்றொரு விபத்தில் எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த 78 வயதான வயோதிபப் பெண் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## அதிகரித்த வெப்பநிலை மே மாதம் வரை நிலவும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது காணப்படும் அதிகரித்த வெப்பநிலை இந்த மாதத்தின் இறுதி நாட்களிலும் (28, 29, 30) மே மாதத்தின் ஆரம்ப நாட்களிலும் குறிப்பாக 12.05.2024 வரை வெப்பநிலை தற்போது உள்ளதை விட உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட வானிலை அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பகல் பொழுதின் அதிகூடிய வெப்பநிலை 40 பாகை செல்சியஸ்க்கு மேலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்காலத்தில் உணரக்கூடிய வெப்பநிலையின் அளவு உண்மையான வெப்பநிலையை விடவும் உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே வேளை காண்டாவனம் அல்லது அக்கினி நட்சத்திரம் என்பது எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நிலவும் என்பதால் வெப்ப அலைச் சுட்டெண் அதிகமாக இருக்கும்.

கடந்த சில நாட்களாக இரவுப் பொழுது வளிமண்டல சாரீரப்பதனின் அளவு உயர்வாக உள்ளது. இது எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என அதில் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

## போலி விசா இணையத்தளம்
### குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அறிவித்தல்

(கொழும்பு)

புதிய விசா முறைமைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள www.srilankaevisa.lk இணையத்தளத்தினை போன்று போலி இணையத்தளம் ஊடாக சிலர் பணம் செலுத்துகின்றமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

Online ஊடாக விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் e visa பகுதியை மாத்திரம் பயன்படுத்துமாறு திணைக்களம் அறிக்கையொன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

கடந்த 17 ஆம் திகதியில் இருந்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் புதிய விசா முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நினைவேந்தல்

(கரணவாய்)

ஊடகவியாலாளர் 'தராக்கி' சிவராமின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது நாளை காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை வி.எம். வீதியில் அமைந்துள்ள யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெறவுள்ளது. (நி-6-60)

## வெள்ளை ஈ தாக்கம் தொடர்பில் தெளிவூட்டல்

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பகுதியில் அதிகரித்துள்ள வெள்ளை ஈ நோய் தாக்கப் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு தென்னை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர் வைகுந்தன் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தார். வெள்ளை ஈ-தாக்கம் ஏற்பட்டுள்ள தேங்காய்கள் (தொழுடன்) முழுமையாக வேறு பகுதிக்கு கொண்டு செல்வது மற்றும் [illegible] யின் ஓலைகளை வேறு பகுதிக்கு கொண்டு செல்வதை முற்று முழுதாக பண்ணையாளர்கள் தென்னை செய்கையாளர்கள் கைவிட வேண்டும் ஏனெனில் அதன் ஊடாகவும் வேறு பகுதிக்கு வெள்ளை ஈ பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளது.

வெள்ளை ஈ தாக்கம் அதிகரித்து காணப்பட்டால் அருகில் உள்ள கமநல சேவை திணைக்களத்தில் தொடர்பு கொள் [illegible] ஆலோசனைகள் மற்றும் வெண் ஈ தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கான முறைகளையும் அறிந்து கொள்ள முடியும் என தெரிவித்தார். (நி-6-316)


## விவசாய அமைச்சர் ஈரானுக்கு விஜயம்

(கொழும்பு)

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று ஈரானுக்கு பயணமாகியுள்ளார்.

தெஹ்ரானில் நடைபெறும் EXPO கண்காட்சியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த அவர் அங்கு பயணமாகியுள்ளதுடன் அங்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, ஈரானின் விவசாய அமைச்சர் மொஹமட் அலி நிக்பக்டை சந்திக்க உள்ளார். இதேவேளை அமைச்சர் மகிந்த அமரவீர EXPO இல் பங்கேற்பதில்லை என முன்னர் தீர்மானித்திருந்த போதிலும், ஈரான் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க கண்காட்சியில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796–1832)

பகுதி IV

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இவ்வேலையைச் சீக்கிரமாகச் செய்து முடிப்பதற்குக் கடினமாக உழைத்தவர்கள் கப்ரின் டோசன், மேஜர் ஸ்கினர் என்ற இருவருமாவர்.

இவ்வீதி வெயாங்கொடை, கேகாலை, கடுகண்ணாவைக் கணவாய், பெரதெனியா வழியாகக் கண்டியை அடைந்தது. கொழும்பு-கண்டி வீதி 1825 இல் முற்றுப் பெற்றது.1825 இல் கொழும்பு, குருநாகலுடன் இணைக்கப்பட்டு, அவ் வீதி தம்புளைவரை விஸ்தரிக்கப்பட்டது. கொழும்பு-கண்டி வீதி, 1831 இல் மாத்தளை வரையும், 1832 இல் தம்புளை வரையும் நீடிக்கப்பட்டன. 1833 இல் குருநாகல், தம்புளை, கந்தளாய் எனுமிடங்களினூடாக கொழும்பு, திருகோணமலையுடன் இணைக்கப்பெற்றது.

பாண்ஸ் அமைத்த தெருக்களினால் பல நன்மைகள் விளைந்தன. முதலாவதாக கண்டி இராச்சியத்தில் ஒழுங்கை நிலைநாட்டும் பிரச்சினைகள் இலகுவாகத் தீர்ந்தன. அதனுடன், மலை நாட்டின் பல பாகங்களில் இராணுவ நிலையங்களை அமைப்பதற்கு ஏற்பட்ட சிரமமும் செலவும் பெருமளவுக்குக் குறைந்தன.

இரண்டாவதாகத் தீவு முழுவதுக்கும் பொதுவான ஓர் அரசாட்சி முறையை ஏற்படுத்த இவ்வீதிகள் துணைபுரிந்தன. நிருவாகத்தில் திறமையும் விரைவும் ஏற்பட்டது. ஆள்பதிகள் மாகாணங்களை இலகுவாகப் பார்வையிட வழி பிறந்தது. அரசாங்க முகவர்கள், நீதிபதிகள், வைத்தியர்கள் யாவரும், மாகாணங்களைத் தரிசித்துத் தமது வேலைகளை விஸ்தரிக்க வாய்ப்புண்டாயிற்று.

தபால் சேவை, போக் வரத்து, பொருள்களை இடம் பெயர்த்தல் எனும் சேவைகளில் கெதியும், பாதுகாப்பும், செலவுக்குறைவும் உண்டாயின.

மூன்றாவதாக, வியாபாரம் அதிகரிக்கவும், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தியடையவும் வாய்ப்பான சூழ்நிலைகள் ஏற்பட்டன. விசேடமாக மலை நாட்டில் தொலைவிலிருந்த உற்பத்தி குறைந்த பிரதேசங்கள், அபிவிருத்திக்கான புது வாய்ப்புக்களைப் பெற்றன.

நான்காவதாக, தாழ் பிரதேசச் சிங்களவர் கண்டியர், முஸ்லீம்கள், தமிழர் யாவரும் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளவும், தமது பொருள்களையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளவும் வசதிகள் ஏற்பட்டன.

### ஆங்கிலேயர் ஆட்சியில் தபாற்சேவை :

தெருக்கள் திறக்கப்பட்டதனால் ஏற்பட்ட இன்னுமொரு நற்பயன் தபாற் சேவையின் விருத்தியாகும்.

இலங்கையில் 1500 களில் ஆண்ட போர்த்துக்கேயர் காலத்திலும், 1600களில் ஆண்ட ஒல்லாந்தர் காலத்திலும் அஞ்சல் துறையில் போதிய வளர்ச்சிகளோ அபிவிருத்திகளோ காணப்படவில்லை. 1700களில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே அஞ்சல் துறையில் துரிதவளர்ச்சியும், அபிவிருத்தியும் நவீன தொடர்பாடல் உத்திகளும் ஏற்பட்டன.

இலங்கையில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியாரின் தகவல் பரிமாற்ற வசதிக்காக இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான ஒரு ஒழுங்கமைக்கப்படாத தபால் சேவை கப்டன் ஏ.கென்னடி என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

1804 தொடக்கம் 1817 வரை அஞ்சல்துறையின் தலைமைப் பொறுப்பிலிருந்த திரு.ஈ.பிளாட்டமன் 1815 இல் கொழும்பு, காலி, மாத்தறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய ஆறு இடங்களில் அஞ்சல் அலுவலகங்களை ஆரம்பித்தார்.

1832 இல் ஆசியாவிலேயே முதல் தடவையாக கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலான குதிரை வண்டித் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1838 இல் இச் சேவை கொழும்புக்கும் காலிக்குமிடையில் விஸ்தரிக்கப்பட்டது.

1850 இல் கொழும்புக்கும் காலிக்கும் இடையில் பழக்கப்பட்ட தபால் புறாக்கள் மூலம் அவசர தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல்1, 1857 இல் 6 பென்ஸ் பெறுமதியானதும் விக்டோரியா மகாராணியாரின் தலையுருவம் கொண்டதுமான முத்திரை வெளியிடப்பட்டது.

இலங்கையில் புகையிரதச் சேவை வந்ததன் பின்னர் முதல் தடவையாக 1865 இல் கொழும்புக்கும் அம்பேபுஸ்ஸவுக்கும் இடையிலான தபால் புகையிரத சேவை உருவாக்கப்பட்டது.

1867 இல் தனியாருக்கான தபால்பை, தபால் பெட்டி சேவைகள் கொழும்பிலும் கண்டியிலும் ஆரம்பிக்கப்பட்டன. ஒகஸ்ட் 22, 1872 இல் தான் முதன் முறையாக தபாலட்டை வெளியானது.

1873 இல் கொழும்புக்கும் இங்கிலாந்துக்கு மிடையிலான காசுக் கட்டளை சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1877 இல் உள்நாட்டு காசுக் கட்டளைச் சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தும், ஏப்ரல்1, 1877 இல் இலங்கை அகில தேச அஞ்சல் சங்கத்தில் ஒரு உறுப்பினராக இணைந்து கொண்டதிலிருந்தும், தபால் துறை துரித அபிவிருத்தி காணத் தொடங்கியது.

1880இல் இலங்கை இந்திய காசுக் கட்டளை சேவை தொடங்கியது. மே1, 1855இல் அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியும் ஆரம்பமானது. 1893 இல் இலங்கை நாணயப் பெறுமதியில் இரண்டு சதம் பெறுமதியான முத்திரை வெளியிடப்பட்டது.

ஒகஸ்ட்19, 1895 இல் கொழும்பு பிரதம அஞ்சல் அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1913 தொடக்கம் 1923 வரை இலங்கையில் அஞ்சலதிபதியாக இருந்த திரு. எப். ஜே.ஸ்மித் முதல் முறையாக 6 உபதபால் அலுவலகங்களை அக்மீமன, திவுலப்பிட்டிய, ஆனமடுவ, கிரியெல்ல, மூதூர், சிலாபத் துறை ஆகிய ஆறு இடங்களில் அமைத்தார்.

1928 இல் இலங்கையின் முதலாவது வான் கடிதம் மாஸெல்ஸ நகரத்திற்கு விமான அஞ்சல் வாயிலாகப் பறந்தது. 1936 இல் அஞ்சல் அறிமுக அட்டை விநியோகம் செய்யப்பட்டது. இங்கிலாந்திலிருந்து தபால்கள் விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்தன.

1947 இல் இலங்கை நாட்டவரான திரு. ஏ. இ. பெரேரா அஞ்சல் அதிபதியாக நியமனம் பெற்றார். 1949 இல் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் வான் அஞ்சல் சேவை ஆரம்பித்தது.1 958 இல் இலங்கை போக்குவரத்துச் சேவையுடன் இணைந்து தபால் பஸ் சேவை தினமும் ஓடத் தொடங்கின. இலங்கை மக்கள் அனைவரும் அஞ்சல்களைத் தங்குதடையின்றிப் பெற்றுக் கொண்டனர்.

சுதந்திரத்திற்குப் பின் ஜனவரி1 1967 இல் இலங்கை முத்திரைப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டது. செப்டெம்பர் 1967 இல் முதல் முத்திரைக் கண்காட்சி மக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டது.1972 இல் முத்திரைகளை வெளியிடும்பணி முத் திரைப் பணியகத் திற் கு வழங்கப்பட்டது.

பெப்ரவரி 3. 2011 இல் இலங்கையில் பயன்படுத்தப்படும் நிலக்கரி மூலம் இயங்கும் வைஸ்ரோய் புகை வண்டி, சுற்றுலாத்துறையில் ஈடுபடுத்தப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு அதன் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியிடப்பட்டது. இதன் அகலம் 132 செ.மீற்றர். உயரம் 30 செ.மீற்றர். இது இலங்கையில் வெளியிடப்படும் மிகப்பெரிய முத்திரை எனத் தபால் சேவை அமைச்சு அறிவித்துள்ளது.

### ஆங்கிலேயர் ஆட்சியில் விவசாயம்

போர்த்துக்கேயர் காலத்தில் விவசாயம் மிகவும் கீழ்க்கட்டத்தை அடைந்தது. அவர்கள், தம் ஆட்சிக் காலம் முழுவதும் ஏதாவதொரு மூலையிலேனும் போரிட்டு வந்தமையினால், நெற்செய்கையின் விருத்திக்கு எவ்வித முயற்சியையும் கைக்கொள்ளவில்லை. ஒல்லாந்தர், போர்த்துக்கேயரைப் போலன்றி தமது மாநிலங்களின் பொருளாதார முயற்சியை விருத்தி செய்ய அரும்பெரும் முயற்சிகள் எடுத்தனர்.

அவர்கள், பழைய நீர்ப்பாசன வேலைகளில் சிலவற்றைப் பழுதுபார்த்தும், புதுத் திட்டங்களையமைத்தும், தென்னிந்தியாவினின்று அடிமைகளை வரவழைத்தும் விவசாய முயற்சிகளை ஊக்குவித்தனர். எனினும் இலங்கை, நெல் உற்பத்தியில் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையை அடைய முடியவில்லை.

பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் இந்நிலையே நீடித்தது. ஆள்பதி நோத்தின் காலத்தில், ஆண்டு தோறும் சராசரி 60,000 மூடை அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இதற்கு அரசாங்க பணமே செலவிடப்பட்டதினால், ஆள்பதிகள் உணவு இறக்குமதியைக் குறைக்கவும் உற்பத்தியை அதிகரிக்கவும் பெரும் முயற்சியெடுத்தனர்.

இலங்கையின் விவசாயப் பிரச்சினை பெரும்பாலும் நீர்ப்பாசன பிரச்சினையாகும். நோத் குளக் கட்டுகளை நிர்மாணிக்கும் குழுவொன்றினை ஏற்படுத்தினர். இக்குழு, விவசாயிகளின் உதவியுடன் குளங்களைத் திருத்தி வந்தது. மெயிற்லந்து பிரித்தானிய மாநிலங்களின் நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி அறிக்கையொன்றினைத் தயாரிக்குமாறு கப்டன் ஷ்னீடர் என்பவரை நியமித்தார். அறிக்கையின் பயனாக, மெயிற்லந்து கிராமப்புறங்களில் விவசாயத்தை ஊக்குவிக்கச் சில வழி வகைகளைக் கைக்கொண்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகமாலைப்...

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றலின் போது மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் கண்ணிவெடி அகற்றலின்போது மனித எச்சங்களுடன் கூடிய ஆடை ஒன்றும் இனங்காணப்பட்டதையடுத்து பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமில் நேற்று சம்பவ இடத்திற்கு வருகை தந்து குறித்த மனித எச்சம் மற்றும் மனித எச்ச இனங்காணப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மூலம் குறித்த பகுதியை கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

கிடைக்கப் பெறுகின்ற எச்சங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பாக பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவருமாறும் தற்போது கிடைக்கப்பெற்ற மனித எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைக்குமாறும் எதிர்வரும் திங்கட்கிழமை சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிடுவதாகவும் நீதவான் தெரிவித்தார். (ம-7,10,316)

## நாட்டின்...

கொண்டவர்கள் மீதோ, இதனை தடுக்கத் தவறியவர்கள் மீதோ குற்றச்சாட்டுக்களை முன்வைக்காது எங்கோ ஒரு மூலையிலிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

பேராயரின் அண்மைய ஊடக சந்திப்பின்போது அநுர அல்லது சஜித்துக்கு வாக்களிக்குமாறு கத்தோலிக்க மக்களுக்கு பேராயர் தெரிவிக்கிறார். ஒரு மதத் தலைவர் எவ்வாறு அவ்வாறான ஒரு கருத்தைத் தெரிவிக்க முடியும்? மதத் தலைவர்கள் என்பவர்கள் தங்களுடைய மதத்தை போதிக்கும் விடயங்களிலே ஈடுபட வேண்டுமே தவிர அரசியலை போதிக்கக்கூடாது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களியுங்கள் என பேராயர் கூறுகிறார். தற்கொலை குண்டுதாரிகளுடன் தொடர்புடைய கட்சிக்கு வாக்களியுங்கள் எனக் கூறுமளவுக்கு பேராயர் மாறியுள்ளார். சிங்கள மக்கள் மீது தீவிரவாத தாக்குதல்கள் இடம் பெற்ற போது சிங்கள ஆட்சியாளர்கள் அதனைப் பயன்படுத்தி வாக்குகளைச் சேகரிக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான பாரிய விடயங்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்றியுள்ளார்.

பேராயரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை கோட்டாபய நிராகரித்துள்ளார். ஒரு மதத் தலைவராக அவர் இவ்வாறு பொய்யுரைக்கக் கூடாது. கர்தினால் அரசியலுக்குள் நுழையத் தேவையில்லை இவ்வாறு மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (ம-7,10)

## வெப்பம்...

வேண்டிய மட்டத்திற்கு மேலும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மேற்கு, சப்ரகமுவ, கிழக்கு, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பம் இவ்வாறு அதிகரிக்கக்கூடும்.

எனவே இதன்போது, போதிய அளவு தண்ணீர் அருந்துதல், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுத்தல், பொது வெளியில் கடுமையான உழைப்பை குறைத்தல் போன்ற சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## இலங்கை...

கான துணைச் செயலாளருடன் நேற்று இடம்பெற்ற விசேட சந்திப்பு குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

குறித்த பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளி[illegible] காரங்களுக்கா[illegible] அலெக்சிஸ் டெய்லருடனான சந்திப்பில் இலங்கையின் உறவு குறித்து உரையாடினோம்.

அமெரிக்க நன்கொடைகள் மூலம் பாடசாலை குழந்தைகளுக்கு சத்தான உணவை வழங்குவதற்கான வேலைத் திட்டம் குறித்தும் கலந்துரையாடினோம்.

இலங்கை - அமெரிக்க உறவு தசாப்த காலத்தைக் கொண்டது என்று பதிவிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## புதிய...

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், விமான எரிபொருள் எண்ணெய், திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு, மசகு எண்ணெய் உள்ளிட்ட பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சுத்திகரிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவை தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் இயங்கினாலும், அதற்கான விரிவான ஒழுங்கு முறை வழிமுறை எதுவும் இல்லை.

தனியார் நிறுவனங்கள் பலவும் பெற்றோலிய உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் பலவும் தொடர்புபடுவதால் இத்துறையில் ஏற்படுகின்ற சவால்களுக்கு தீர்வு காணல், உற்பத்திகளின் தரங்களை அதிகரித்தல் மற்றும் வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களின் தேவைகளைப் பாதுகாப்பதற்காக சுயாதீன, ஆற்றல்மிக்க, பயனுள்ள மற்றும் வினைத்திறனான ஒழுங்கு முறைப்படுத்தல் பொறிமுறைக்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், அது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும், சட்டங்களைத் தயாரிப்பதற்கும் வலுசக்தி, மின்சக்தி அமைச்சின் செயலாளரின் தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்காக வலுசக்தி, மின்சக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் [illegible] (ம-7,10)

## விபரீத...

இதில் பருத்தித்துறையைச் சேர்ந்த சுகதாஸ் ரஞ்சனி (வயது-36) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

இம்மாதம் எட்டாம் திகதி நச்சுத் திரவம் உட்கொண்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்த நிலையில் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,10,60)






























Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்.கச்சேரிக்கு அண்மையில் இயங்கும் Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- Kitchen உதவியாளர்
- Room Cleaners
- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்
- பாத்திரம் கழுவும் பணியாளர்

வயது எல்லை 40ற்கு உட்பட்ட இருபாலாரும்.
வேலை இடம் - கச்சேரிக்கு அருகாமை

**076 012 0283**

இற்கு விபரத்தை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் (569)



## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**

புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்

**077 64 212 64**

கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி



## அரிசி, தானியங்களை அரைப்பவர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 10" மற்றும் 12" கிறைண்டர். 230Kg எடை கொண்டதும் உதறல்கள் அற்றதுமான, இந்தியன் மோட்டார் 5 HP மற்றும் 7.5 HP இல் இயங்கக்கூடிய புல்ட் மொடல் (மட்டை வைக்கத் தேவையில்லை) கிறைண்டர் உத்தரவாதத்துடன் இப்பொழுது எம்மிடம்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 4021
A-9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A-9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020



Hotline : 071 535 7799/ 071 973 9917 (568)


## பஞ்சாப் வெற்றி

பிராஸ்ரோவின் அதிரடியான சதம் மூலம் கொல்கத்தாவிற்கு எதிரான போட்டியில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.




முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 261 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 18.4 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (ம-7.10)


## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (551)

**074 17 37 684**



## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்துத் தரப்படும்.
ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m-400m தூரம்,நல்ல சூழல்.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (564)

**077 617 2892**



## 5ஆம் ஆண்டு நினைவில்



தோற்றம் 1945 . 03 . 28
மறைவு 2019 . 04 . 22

அமரர் திரு. **செல்லத்துரை தர்மரத்தினம்**

(பெரியண்ணை)

(உரிமையாளர் - STR Multy Center, STR Travels - அராலி)

*திதி: 27.04.2024 சங்கடஹர சதுர்த்தி*

(565)

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்



## ORGANIZATION FOR INTEGRATED SUSTAINABLE DEVELOPMENT (OISD)

ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம்

### VACANCY FOR ADMINISTRATIVE COORDINATOR

Organization for Integrated and Sustainable Development (OISD) is a non-profitable organization (local NGO) registered under the voluntary services organizations' act (Reg no: KR/DS/SS/NGO/2016/41) in 2016. We have been working on community enhancement & Economic Development with the vulnerable communities in the district of Kilinochchi.

**KEY ROLES AND RESPONSIBILITIES:**

- The administrative coordinator is responsible for the overall administration and finance control of the organization. (Assets, Procurement and Logistics Management)
- Ensure proper book keeping in accordance to the Sri Lankan Accounting System, maintain clear separate accounts relating to each project and regular reporting on the project performance.

**NECESSARY SKILLS & COMPETENCIES:**

- Degree in finance and/or proven reputation of being passionate with 6 – 10 years' experience in a senior management level.
- Strong interpersonal skills and well-developed written and oral communications in Tamil and English.
- Strong computer literacy skills, in-depth knowledge of accessing accounting packages, with particular experience in budget planning and staff management.
- Communicative and independent excellent interpersonal skills, ability to engage effectively with project teams and in team environments.
- Ability to ride motor bikes with a valid ridding license. Willing to stay in the close proximity of base station in Kilinochchi.

**Applications:**

- Applications will not be accepted after the closing date.
- Closing date : 15th May 2024
- Please note that only selected applicants will be personally contacted for interviews.
- Applicants are requested to apply online through the below link / QR code:

Application for OISD (google.com):

**Contact Information:**
The Administrative Officer,
No 19, First Lane, Thirunagar North,
Kilinochchi
E-mail ID: oisd.kili@gmail.com, Phone #: 021 439 4965 / 021 228 2277

(575)



## IELTS - 27.04.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (544)



## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111**

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna. (511)



## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு

(C-0217)



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0217)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 257/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg 7 star கோதுமை மா | - 179/= | |
| 1 Kg நவை | - 286/= | |
| 1 Kg நீட்டல் பச்சை | - 166/= | |
| 1 Kg அரிசி மா | - 200/= | |
| 1 Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 1 Lux றோஸ் சோப் | - 145/= | ~~175/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 1 Baby Soap | - 115/= | ~~145/=~~ |

450g Anchor




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (580)

Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, [illegible] றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.